அதிகாரம் 9

# புதிய உலகத்திற்கான தேவனுடைய கட்டளைகளும் உடன்படிக்கையும்

பேழையை விட்டு வெளியே வந்த நோவா இரண்டாம் ஆதாமாக அனுப்பப்படுகிறான். உலகம் பாவத்தினால் தடைப்பட்டு அழிக்கப்பட்டது, ஆனால் நோவாவின் குடும்பம் இன்னும் தேவ சாயலையுடையவர்களாய் இருந்தார்கள். தேவன் சகல ஜீவராசிகளுக்கும் புதிய ஆரம்பத்தை நோவா மூலமாகவும், பேழையில் தப்பித்தவைகளின் மூலமாகவும் செய்தார்.

## புதிய உலகத்துக்கான தேவ பராமரிப்பு (9:1-7)

**1பின்பு தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வதித்து:
நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள். 2உங்களைப்பற்றிய
பயமும் அச்சமும் பூமியிலுள்ள சகல மிருகங்களுக்கும், ஆகாயத்திலுள்ள
சகல பறவைகளுக்கும் உண்டாயிருக்கும்; பூமியிலே நடமாடுகிற யாவும்,
சமுத்திரத்தின் மச்சங்கள் யாவும், உங்களுக்குக் கையளிக்கப்பட்டன.
3நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், உங்களுக்கு ஆகாரமாய்
இருப்பதாக; பசும் பூண்டுகளை உங்களுக்குத் தந்தது போல, அவைகள்
எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன். 4மாம்சத்தை அதின்
உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம். 5உங்களுக்கு
உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்திற்காகப் பழிவாங்குவேன்; சகல ஜீவ
ஜந்துக்களிடத்திலும் மனுஷனிடத்திலும் பழிவாங்குவேன்;
மனுஷனுடைய உயிருக்காக அவனவன் சகோதரனிடத்தில்
பழிவாங்குவேன், 6மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால்,
மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய
இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது. 7நீங்கள் பலுகிப் பெருகி,
பூமியிலே திரளாய் வர்த்தித்து விர்த்தியாகுங்கள்" என்றார்.**

**வசனம் 1.** நோவாவிற்கும் அவன் குமாரர்களுக்கும் தேவன் ஆசீர்வாதத்தை தன் வாயைத்திறந்து, 1:28ல் கூறியிருக்கும்

ஆசீர்வாதத்தை மீண்டும் கூறினார். இங்கே கூறப்பட்டுள்ள ஆசீர்வாதம் சுருக்கமாக இருந்தாலும் அதின் அர்த்தம் மாறாமல் உள்ளது: **நீங்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள்** (காண்க 8:17). இதேபோன்று ஒரு ஆசீர்வாதத்தை இந்த அதிகாரத்தின் முடிவில் கூறியுள்ளார், ஆனால் இது சற்று விரிவானதாய் உள்ளது (9:7). படைப்பின் நோக்கம் இங்கே நினைப்பூட்டப்படுகிறது; மீண்டுமாக இந்த உலகம் மனிதர்களினால் நிரப்பப்பட வேண்டும்.

**வசனங்கள் 2, 3.** சகல மிருகங்களையும் மனிதன் ஆளுவான் என்று உறுதிப்படுத்தப்பட்டப்பின், மிருகங்களை கொன்று உண்பதற்கான விதிமுறைகளை தேவன் கொடுத்தார். மனிதன் சைவ உணவுகளை மட்டும் உண்டிருப்பானா? அல்லது, வெள்ளத்திற்கு முன், தேவனுக்கு பலியாக படைக்கப்பட்ட மிருகங்களையும் உண்டிருப்பானா? இதற்கான பதிலை எந்த ஒரு நிச்சயத்தோடும் கூற முடியாது (ஆகிய விளக்கங்களை காண்க 1:29, 30). பின் கூறியது பிரளயத்திற்கு முன்னதாக உண்மையாகவும் இருக்கலாம், ஆனால், முதல் முறையாக தேவன் எல்லா தாவரங்களையும் ஏதேன் தோட்டத்தில் சாப்பிடக் கொடுத்தது போல (1:29) **உயிருள்ள சகல மிருக ஜீவன்களையும் சாப்பிடலாம்** என்று கூறியது இங்கு தான்.

மனிதன், மிருகங்களையும் **சகல ஊரும் பிராணிகளையும், கடலில் உள்ள மீன்களையும்** சாப்பிடுவதற்கு அதிகாரம் பெற்றிருந்ததால், மிருக இராஜ்ஜியத்தில் சில அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டன. ஆதி முதலே மனிதன் தனக்கடுத்த உயிரினங்களை ஆண்டு கொண்டிருந்தான் (1:26-28), எனினும், இந்தப் பகுதியில் சற்று வலிமையாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் இருந்து மிருகங்கள் மனிதனை கண்டு நடுங்கி எச்சரிக்கையாய் இருந்தது மாத்திரமல்ல, **பயத்தோடும் அச்சத்தோடும்** இருந்தன. மனிதனுக்கும் மிருகங்களுக்கும்; உள்ள இப்படிப்பட்ட உறவு, தோட்டத்தில் ஆதாமிற்கும் (2:19, 20), பேழையில் நோவாவிற்கும் (7:8, 9) இருந்ததைவிட மிக வித்தியாசமானது.

மற்றொரு குழப்பமான காரியம் இந்தப் பகுதியிலிருந்து எழுகிறது, என்னவென்றால், தேவன் வெள்ளத்திற்குப்பின், எழுத்தின்படி மனிதனுக்கு “சகல மிருகங்களையும் சாப்பிடக் கொடுத்தாரா” என்று. தேவன் மனிதனுக்கு சுத்தமான மிருகங்கள், பறவைகள் மற்றும் பூச்சிகளை மாத்திரம் அல்லாமல், மோசேயினால் பிற்காலத்தில் அசுத்தமான மிருகங்கள் என்று கூறப்பட்டவைகளையும் சாப்பிடக் கொடுத்தாரா (லேவி. 11:1-47)? சுத்தமான மிருகங்கள் அசுத்தமானவைகளிலிருந்து வித்தியாசப்படுத்தப் பட்டிருந்ததாக முன்னதாக கூறப்பட்டது (7:2, 8; 8:20), ஒருவேளை இதே காரியம் இங்கும் கருதப்பட்டு இருக்கலாம். எனினும், தேவன் மனிதன் சுத்தமான மிருகங்களை மட்டும் சாப்பிடலாம் என்றும் அசுத்தமான மிருகங்களை சாப்பிடக்கூடாது என்றும் உண்மையில் அவர் நினைத்திருந்தால்,

"உயிருள்ள நகரும் சகல மிருகங்களையும்" சாப்பிடக் கொடுத்தார் என்பது சற்று வியப்பாக உள்ளது.

பகுத்தறிதலில் கொள்கை மாறாமல் இருக்க வேண்டுமென்றால், புதிய ஏற்பாட்டிலுள்ள சுத்த மற்றும் அசுத்த உணவுகளைக் குறித்தும் அதேப்போல ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசு "எல்லா உணவையும் சுத்தமுள்ளதாக கூறினார்" என்று மாற்கு கூறியதையும் (மாற்கு 7:19), பவுல் "தேவன் படைத்ததெல்லாம் நல்லதாய் இருக்கிறது, ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல" (1 தீமோ. 4:4) என்றும் கூறினதை மட்டும் கருத்தில் கொள்ளாமல் இருந்தால், சுத்தமான மற்றும் அசுத்தமான உணவுகளுக்கான வேறுபாடு இன்று நடைமுறையில் சாத்தியமா? கட்டாயம் இல்லை, எனவே, வரையறையற்று உணவு குறித்து தேவன் கூறியவற்றை குறித்து தீர்மானிப்பது ஆதாரமற்றதாக இருக்கும். கட்டளைகள் கொடுக்கப் படுவதற்கு முன்பு, பலி செலுத்துவதற்கே தவிர சாப்பிடுவதற்கு சுத்தம் மற்றும் அசுத்தமான மிருகம் என்று எந்த வரையறையும் கொடுக்கப்படவில்லை.

**வசனம் 4.** வேதத்தில் முதன்முறையாக இங்கு தான் **மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடு புசிக்க** வேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது. பின் இஸ்ரவேலருக்கு இரத்தத்தை புசிப்பது குறித்து பல தெளிவான கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளது (லேவி. 3:17; 7:26, 27; 17:10-14; உபா. 12:15, 16, 20-24), மற்றும் அப்போஸ்தலர் நடபடிகளில் 15:29ல் இதே கட்டளை புறஜாதி கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. தேவன் ஒருவரே ஜீவனை கொடுப்பவர் என்பதால், பிரளயத்திற்கு பின் இருந்த மக்கள், தேவன் எல்லா உயிரினங்களுக்குள்ளும் வைத்திருக்கும் உயிராற்றலை மதிக்க வேண்டியதாய் இருந்தது. இந்த இடத்தில் இரத்தம் உயிருக்கே சமமாய் கூறப்பட்டுள்ளது; இரத்தத்தை புசிப்பதோ குடிப்பதோ கூடாது என்பதற்கு இதுவே காரணம்.

முழு மேற்கு ஆசியப் பகுதிகளிலும் இதற்கு இணையான எந்த ஒரு தடையும் கிடைக்கவில்லை. இத்தகைய தனித்தன்மையே, இந்த கட்டளை முற்காலத்திய விக்கிரக வழிபாட்டாளர்கள் செய்த தடை இல்லை என்றும், இது தெய்வீக கட்டளையாக வந்தது என்றும் தெளிவாகக் காட்டுகிறது.[1] இந்த கட்டளை, இஸரவேலர் போன்ற எந்த தனிப்பட்ட ஜனக்கூட்டத்திற்கு மட்டும் அல்லாமல், எல்லாருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், அனைவரும் நோவாவின் புத்திரர்கள். முற்காலத்தில் இருந்த சில விக்கிரக ஆராதனைக்காரர்களைப் போல மனிதகுலம் இரத்த வெறி கொண்டவர்களாய் இருக்க கர்த்தர் விரும்பவில்லை.[2] இரத்தத்தை புசிப்பதோ குடிப்பதோ, எல்லா ஜீவராசிகளுக்கு ஜீவனைக் கொடுத்த தேவனை அவமதிப்பதாகும். மிருக மாமிசத்தை உண்பதற்கு தெய்வீக

அனுமதி மனிதனுக்கு வழங்கப் பட்டிருந்தாலும், அவைகள் நன்றாக பாதுகாக்கப்பட்டு சீர்குலைக்கப்படாமல் இருக்க வேண்டும். தேவன் மனிதன் மிருகங்களை ஆள கொடுத்திருந்தாலும், தேவனின் படைப்புகளை அவன் விசுவாசமுள்ள வேலைக்காரனாய் ஆண்டு கொள்ள வேண்டும். தேவனே எல்லாவற்றிற்கும் தலை.

**வசனம் 5.** அடுத்த வசனம் மனித வாழ்விற்கு மதிப்பளிக்கும் மற்றொரு தெய்வீக கட்டளை சம்மந்தப்பட்டு உள்ளது: தேவன், **உங்கள் உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்திற்காக பழி வாங்குவேன், சகல ஜீவஜந்துக்களிடத்திலும் மனுஷரிடத்திலும் பழிவாங்குவேன்; … என்றார்.** தேவன், “மனிதன்” மற்றும் “மிருகம்” ஆகிய இரண்டிற்கும் மரணத்திற்கான வார்த்தைகளை கூறியுள்ளது சற்று வியப்பாகவே உள்ளது, ஏனென்றால், விலங்குகள் நல்ல நடத்தை உடையது அல்ல. எனினும், பிரளயத்திற்கு முன்னதான உலகம் வன்முறைகளால் நிறைந்து இருந்தது (6:11), ஆதாரத்துடன், அறிவற்ற கொலைகள் இருந்தன, இப்படிப்பட்ட நடக்கையைத் தாம் கண்டு பொறுத்துக்கொள்ள முடியாது என்று நோவாவையும் அவன் சந்ததியாரையும் கர்த்தர் வலியுறுத்தினார். மனித உயிர் மிக புனிதமானது, ஏனென்றால் அது மனிதன் மற்றும் மிருகங்களுக்கும் கணக்கு கொடுக்க வேண்டும்.

இதில் “பழிவாங்குவேன்” என்று மூன்று முறை வருகிறது, இதை தேவனே கூறுகிறார். முதல்முறை கூறும்போது, “உங்கள் உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்திற்காக பழிவாங்குவேன்” என்று கூறுகிறார். இதற்கு அர்த்தம் என்னவென்றால், தேவன் “ஒரு உயிருக்கு ஒரு உயிர்” “வேண்டும்” (דָּרַשׁ, *darash*) என்பதாகும்.[3] ஒரு மனிதனை கொலை செய்வது தனது சாயலாக மனிதனைப் படைத்த தேவனுக்கே விரோதமாய் செய்வதாகும் (1:26, 27; 5:1, 2; 9:6).

இந்த தெய்வீக ஒப்புதலில் மிருக ஜீவன்கள் மற்றும் மனிதர்கள், இரண்டுமே காரிய கர்த்தாவாக பங்காற்றுகிறது, பின் மோசேயின் கட்டளையிலும் கூறப்பட்டுள்ளது. அக்கட்டளையில் ஓர் மாட்டைப் பற்றி எடுத்துக்காட்டாக கூறப்பட்டுள்ளது. மாடு “முட்டுகிறதாய் இருந்து” அது அதன் எஜமானுக்கு அறிவிக்கப்பட்டும், அவன் அதை கட்டிவைக்காததினால், யாரையாவது அது கொன்றால், அம்மாடும் எஜமானும் கொல்லப்பட வேண்டும் (யாத். 21:29).

**அவனவன் சகோதரன்** என்பதற்கு அர்த்தம் என்ன? காயீன் தன் சகோதரனாகிய ஆபேலைக் கொன்ற முதல் கொலையைக் குறிக்கலாம் (4:8). மட்டுமல்லாது, நாம் அனைவரும் மனிதகுலம் என்று நினைப்பூட்டுகிறது.[4] பின்விளைவுகளைக் கருத்தில் கொண்டு, சில மொழிபெயர்ப்புகள் “அவனவன் சகோதரன்” என்பதை உடன் மனிதர்களைக் குறிக்கிறது (NIV; ESV). மற்றொரு மொழி பெயர்ப்பில் “சக மனிதனை கொன்றவன் கொல்லப்பட வேண்டும்” என்று

கூறப்பட்டுள்ளது (NLT). மற்றொரு வெளிப்பாட்டில் "அவனவன் சகோதரன்" என்பது, தன் சகோதரனை கொன்றவனை பழி வாங்குபவரை முன்கூட்டியே குறிப்பிடுகிறது என்று கூறப் பட்டுள்ளது (காண்க எண். 35:9-34, உபா. 19:1-13).

**வசனம் 6.** இந்த வசனத்தில் குற்றத்தின் தண்டனை, **மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படும்** என்று தொடர்கிறது ஆதியாகமம் 37:22ல் திட்டமிடப்பட்டு கொலை செய்யவிருந்த யோசேப்பிற்காக ரூபன் தன் சகோதரர்களிடம் பரிந்து பேசினதை குறித்து கூறும்போது, "இரத்தம் சிந்துதல்" பற்றி கூறப்பட்டுள்ளது (காண்க 1 இராஜா. 2:31; எசே. 22:4). தெய்வீகக் கட்டளையில், கொலை ஒரு கொடுங்குற்றம் என்று கூறப்பட்டுள்ளது, மற்றும் கொலை செய்தவனும் கொல்லப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த வாக்கியம் பல கேள்விகளை எழுப்புகிறது: கொலை செய்தவன் கொல்லப்பட வேண்டும் என்றால், அவனை கொன்றவன் கொலை செய்த குற்ற உணர்ச்சியோடு இருக்க வேண்டுமா? ஏந்த தயக்கமும் இன்றி, இதற்கான பதில் என்னவென்றால் "இல்லை" என்பதே. சட்டத்தை தன் கையில் எடுத்து அதை பழி வாங்க பயன்படுத்தாதவரை, தண்டனை கொடுப்பது கொலையாகாது.

ஒரு கொலைக்கு வஞ்சகம் தீர்ப்பது தனிப்பட்ட காரியமாகத் தீர்க்கப்படவில்லை. தெளிவாகக் கூறினால், தேவன் அதை சமுதாயத்திற்கே கட்டாயமாக வைத்தார். நோவா காலத்தில் இது எப்படி நடந்தது என்று நமக்கு கொடுக்கப்படவில்லை, என்றாலும், மோசேயின் கட்டளையில் இருக்கும் சட்டப்படியான நடைமுறைகளை நாம் அறிகிறோம். கைப்பிசகாய் ஒருவன் கொலை செய்தால், கொன்றவனுக்கு "இரத்தப்பழி வாங்குபவனிடமிருந்து" (நெருக்கமான உறவினர்) தேவ சட்டம் பாதுகாப்பளிக்கிறது. இப்படிப்பட்ட காரியங்கள் அடைக்கலப் பட்டணத்திலுள்ள மூப்பர்களால் விசாரிக்கப்பட வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவர் திட்டமிட்டு கொலை செய்தான் என்று தீர்க்கப்பட்டால், அவனும் கொலை செய்யப்பட வேண்டும் (யாத். 21:12-14; எண். 35:9-34; உபா. 19:1-13). இதே கோட்பாடு கிறிஸ்துவின் சட்டத்தின் கீழும் அடங்கும். பவுல் ரோமாபுரிக்கு எழுதும் தன் கடிதத்தில், அதிகாரிகளின் வாள் "துர்க்கிரியை செய்கிறவனுக்கு" எதிராக இருக்கும் என்று ஒப்புக்கொள்கிறார் (ரோமர் 13:4). மரண தண்டனை கொடுக்க இராயனுக்கு இருக்கும் உரிமையை கருத்தில் கொண்டு, அதை பின்பற்ற, பவுல், தான் மரணத்திற்குப் பாத்திரமாய் இருந்தால், தன்னையும் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று அபயமிடுகிறார் (அப். 25:11).

மற்றொரு கேள்வியும் எழுகிறது: கொலை செய்தவன் *ஏன்* கொல்லப்பட வேண்டும் என்று தேவன் நிர்ப்பந்திக்கிறார்? மனித உயிர்

புனிதமானது என்று கூறுவது இதற்கு மேலோட்டமான பதிலாக இருக்கும். இது குறித்து மேற்கொண்டு யோசிக்க முடியாது என்பதை நிச்சயமாக மனிதன் தற்செயலாய் அறிந்திருக்க முடியாது. கொலையை தடைசெய்வதற்கான உள்ளார்ந்த அர்த்தம் என்ன வென்றால், மனித உயிர் பூமியில் வாழும் பிற உயிர்களைப் பார்க்கிலும் பண்பில் சிறந்தது. இந்த உலகில் மனிதனே தேவனின் சாயலை உடையவனானதால், கொலைக் குற்றம் செய்தவன் தன் வாழ்க்கையையே அதற்கு விலையாக செலுத்த வேண்டும் என்று தேவன் பரிந்துரைக்கிறார். **மனிதன் தேவசாயலை** தன்னில் இழந்தால், அவன் மிருகத்தைப் போல நடத்தப்படுவான், வாழ்க்கை மதிப்பற்றதாய் மாறிவிடும். இந்த மனப்பாங்கு பல அட்டூழிய செயல்களுக்கும் கொலைகளுக்கும் வழிவகுத்து, மனித ஆளுமையையும், தனது மேன்மை நிலையையே மனிதனுக்குக் கொடுத்த தேவனை மதிப்பதிற்கான அடிப்படை காரியத்தை கூட எடுத்து விடுகிறது.

இந்த புரிதலினால் ஓர் முறன் கருத்து எழுகிறது. ஒரு பக்கம், தேவனே எல்லா உயிரினங்களைப் படைத்தார், அவர் மட்டுமே அவைகளின் உயிரை எடுக்க முடியும். மற்றொரு பக்கம், கொலை செய்தவனை, தேவன் மனிதனைக் கொண்டே தண்டிக்கும்படி கூறுகிறார், அவரே அந்த அதிகாரத்தையும் கொடுக்கிறார். தேவன் பயன்படுத்தும் கருவியாக ஒரு தனிப்பட்ட நபரே இருந்து தண்டனையை வழங்குகிறார். எனவே அவன் எக்குற்றத்திற்கும் ஆளாகமாட்டான்.

**வசனம் 7.** இந்த வசனத்தின் முன்பகுதி 9:1ல் சொல்லப்பட்டதை மீண்டுமாக கூறுகிறது, அதோடுகூட சில புத்திகூறும் வார்த்தை களையும் கூறுகிறார். தேவன், **நீங்கள் பலுகிப்பெருகி பூமியிலே திரளாய் வர்த்தித்து விர்த்தியாகுங்கள்** என்றார். பிரளயத்தில் தப்பித்தவர்களின் வாழ்க்கை முறை வன்முறை செய்த இராட்சதர்களை விட மிக வேறுபட்டு இருந்தது (6:4). பிரளயத்திற்கு முன் இருந்த கொலையாளிகளைவிட நோவாவும் அவன் குடும்பமும், ஆதியில் ஆதாமும் ஏவாளும் இருந்தது போல (1:28), உயிர்களை விருத்தியடையச் செய்வதில் தனித்தன்மை உடையவர்களாய் இருந்தார்கள்.

9:7ல் கூறப்பட்டுள்ள கட்டளை பன்மை பிரதிபெயர்ச்சொல்லில் தொடங்குகிறது, ஆகவே அது **நீங்கள்** என்று கூறப்பட்டுள்ளது. இது அடிப்படையில் நோவாவின் குமாரர்களையே குறிக்கிறது, ஏனென்றால், வம்ச வரலாற்றில் (10:1-32) கூறப்பட்டுள்ளது போல, பூமியை நிரப்ப இவர்களே இருந்தார்கள்.

## தேவ உடன்படிக்கை மற்றும் அடையாளம் (9:8-17)

### உடன்படிக்கை (9:8-11)

**8பின்னும் தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் நோக்கி:
9நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியோடும்,
10உங்களோடே பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள் முதல்
இனிப் பூமியில் உண்டாகப் போகிற சகல ஜீவஜந்துக்கள் பரியந்தம்,
பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற
பூமியிலுள்ள சகலகாட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை
ஏற்படுத்துகிறேன். 11இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்
பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லையென்றும், பூமியை அழிக்க
இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும், உங்களோடே என்
உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார்.**

**வசனம் 8.** நோவாவும் அவன் குடும்பமும் பேழைக்குள் செல்வதற்கு முன்பாக, தேவன் அவர்களோடே ஒரு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உடன்படிக்கையை செய்தார் (6:18). வரவிருந்த வெள்ளத்திலிருந்து அவர்களை காப்பாற்ற அவர்களுக்கு வாக்குக் கொடுத்தார். அவர் அதைச்செய்தார், ஆனால் அவர் வாக்கில் இன்னும் பல இருந்தது.

புதிய உலகில் மனதில் கொள்ள வேண்டிய சலுகைகளையும் தடைகளையும் குறித்து **நோவாவிடமும் அவன் குமாரர்களிடமும்** பேசி முடித்தவுடன், தேவன் ஒரு புதிய காரியத்தைக் குறித்துப் பேசினார்.

**வசனம் 9.** தேவன் அவர்களோடும் அவர்கள் **சந்ததியோடும்** தன் **உடன்படிக்கையை** கட்டி **எழுப்புவேன்** (קוּם, *qum*, கும்) அல்லது "உறுதிப்படுத்துவேன்"[5] என்று அறிவித்தார். எபிரெய வார்த் தையான *கும்* எனும் சொல் காரணமாக சொல்லப்படும் நிலையாக அல்லது எழுத்தின்படி "நிலைநிற்க, நிறுத்து"[6] என்று பொருட்படும். தேவன் ஒரு புதிய உறவை (உடன்படிக்கை) பேழையில் இருந்தவர்களிடம் ஏற்படுத்தலாம், அல்லது, வசனத்தை பார்க்கும் போது. அவர் 6:18ல் நோவாவிடம் செய்த உடன்படிக்கையின்படி அவர் அதை செயல்முறைப்படுத்த, நிறைவேற்ற அல்லது தொடர்ந்து கொண்டு செல்லுவார் என்றும் பொருட்படும்.

**வசனங்கள் 10, 11.** இந்த உடன்படிக்கை **பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், பூமியிலுள்ள சகல காட்டு மிருகங்களோடும், பேழையிலிருந்து புறப்பட்ட** சகல ஜீவஜந்துக்களோடும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. தேவனின் வாக்கு என்னவென்றால், **மாம்சமானவைகளெல்லாம்** ஜலப்பிரளயத் தினால் சங்கரிக்கப்படுவதில்லை, **பூமியை** அழிக்க இனி **ஜலப்பிரளயம்** உண்டாவதில்லை என்பதாகும்.

இது ஒரு பக்கம் சார்புடைய உடன்படிக்கை, காரணம், கட்டுப்பாடு தேவனிடத்தில் பெற்றிருக்க வேண்டும். மனிதன் ஒருவேளை எதிர்காலத்தில் எத்தகைய பாவங்களையும் செய்யட்டும் (காண்க 8:21), பூமி முழுவதையும் தேவன் ஜலத்தினால் அழிக்கமாட்டார். மற்றொரு முறையில் கூறினால், உடன்படிக்கை நிபந்தனையற்றது ஆதலால், மனிதன் என்ன செய்தாலும் வாக்குத்தத்தம் ஒருக்காலும் ஒழியாது. மறுபக்கத்தில் மனிதன் நீண்ட நாள் வாழ்ந்து பூமியை நிரப்பி, ஆசீர்வாதங்களான விதைப்பு அறுப்பு ஆகியவற்றை அனுபவிக்க வேண்டுமென்றால் (8:22; 9:1, 7), நாம் தடைசெய்யப்பட்ட காரியங்களை அடக்கிக் கொண்டு இருக்க வேண்டும். இரத்தத்தை புசித்து கொலை செய்கிறவன், பொல்லாப்பினின்று கழுவப்பட்ட உலகை சேர்ந்தவன் அல்ல (காண்க 9:4-6). தெய்வீக தீர்ப்பு எதிர்காலத்தின் சமயத்தில் இருக்கும் ஆனால் நியாயத்தீர்ப்பு பிரளயத்தைப் போல இருக்காது.

## அடையாளம் (9:12-17)

**12அன்றியும் தேவன்: எனக்கும் உங்களுக்கும், உங்களிடத்தில் இருக்கும் சகல ஜீவஜந்துக்களுக்கும், நித்திய தலை முறைகளுக்கென்று நான் செய்கிற உடன்படிக்கையின் அடையாளமாக: 13நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். 14நான் பூமிக்கு மேலாய் மேகத்தை வருவிக்கும்போது, அந்த வில் மேகத்தில் தோன்றும். 15அப்பொழுது எல்லா மாம்ச ஜீவன்களையும் அழிக்க இனி ஜலமானது பிரளயமாய்ப் பெருகாதபடிக்கு எனக்கும் உங்களுக்கும் மாம்சமான சகல ஜீவஜந்துக்களுக்கும் உண்டான என் உடன்படிக்கையை நினைவுகூருவேன். 16அந்த வில் மேகத்தில் தோன்றும் போது, தேவனுக்கும் பூமியின் மேலுள்ள சகலவித மாம்ச ஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையை நான் நினைவுகூரும்படிக்கு அதை நோக்கிப் பார்ப்பேன். 17இது எனக்கும், பூமியின் மேலுள்ள மாம்சமான யாவுக்கும், நான் ஏற்படுத்தின உடன்படிக்கையின் அடையாளம் என்று நோவாவோடே சொன்னார்.**

**வசனங்கள் 12, 13.** நோவாவும் அவன் குடும்பத்தினரும், வெள்ளத்தை அனுப்பி பொல்லாப்பினால் நிரம்பி இருந்த உலகை கழுவியதன் மூலமாக தேவனின் வல்லமையை கண்டனர், மட்டுமல்லாமல், அழியும் நிகழ்வில் இருந்து தேவனின் காப்பாற்றிய கிருபையையும் கண்டனர். அவர்களைப் பொறுத்தவரை, மீண்டும் இத்தகைய நிகழ்வு நடக்காது என்ற தேவனின் வாக்குத்தத்தமே போதுமானதாக இருந்தது. எதிர்கால **சந்ததியினர்** வித்தியாசமாக மறுமொழி சொல்ல முடியும், **உடன்படிக்கையை** தேவன் அடையாளத்தோடு அதை முத்தரித்தார் (ஆகிய விளக்கங்களை காண்க

9:17). அவர் **வானத்தில் வானவில்லை** வைக்கப்போவதாக கூறினார்.

**வசனங்கள் 14, 15. வில்** (קֶשֶׁת, *qesheth*, குஷத்) என்ற சொல், வில்வித்தைக்காரனது வில்லையும் வானவில்லையும் குறிக்கும்,[7] சிலர் வில்வித்தையை தேவன் ஒரு போர் வீரனாக கருதுகிறார்கள் (யாத். 15:3; ஏசாயா 42:13; செப். 3:17), தன் எதிரிகள் மீது அம்பு அல்லது அக்கினியை வல்லமையான வில்லினால் எய்கின்றார் (சங். 7:13; 18:14; ஆபகூக் 3:11). அவர்கள் கூறுவது என்னவென்றால், தேவன் வில்லை **மேகத்தில்** வைக்க காரணம், மனிதனுக்கு **மீண்டுமாக பிரளயத்தால்** உலகை **அழிக்கமாட்டேன்** என்று உறுதிப்படுத்த என்று, எனினும், அத்தகைய ஒரு வில் இருந்ததாக, நோவா காலத்திற்கு பின்னும், வேதத்தில் இருந்தோ அல்லது வேறு வழியாகவோ நமக்கு எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை.[8] அது சற்று குழப்பமானதாக உள்ளது, மற்றும், தேவன் நோவாவிடம் வில்லைப்பற்றி கூறியதன் முக் கியத்துவத்தைக் குறித்து நாம் யோசிக்க வேண்டும். வெள்ளத்தை கொண்டு பார்த்தால், அது யுத்தத்தில் பெற்ற வெற்றியை குறிப்பது அல்ல, மாறாக, தேவ கிருபையின் அடையாளமாக, தன் வாக்கில் உண்மையாய் இருந்து சகல **ஜீவராசிகளையும்** மீண்டும் **ஜலத்தினால்** அழிக்கமாட்டேன் என்று நினைவுபடுத்தும் அடையாளமாகவே இருக்கிறது.

**வசனம் 16. அந்த வில் மேகத்தில் தோன்றும் போது, தேவனுக்கும் பூமியின் மேலுள்ள சகல வித மாம்ச ஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையை** நான் நினைவுகூரும்படிக்கு அதை நோக்கிப் பார்ப்பேன். இது எனக்கும், பூமியின் மேலுள்ள மாம்சமான யாவுக்கும், நான் ஏற்படுத்தின உடன்படிக்கையின் அடையாளம். இதில் "நினைவுகூருதல்" (זָכַר, *zakar*, ஜகர்) என்பது, தேவன் அவரது உடன்படிக்கையை மறந்து விடும் அபாயத்தில் இருந்ததினால், அதை நினைவுகூர மேகத்தில் ஒரு அடையாளம் அவருக்கு தேவைப்பட்டது என்று பொருள்படவில்லை. அதற்கு பதிலாக, வானவில் மனித குலத்திற்கு தேவன் தமது "உடன் படிக்கையின் நேர்மையினை"[9] அவர்கள் சார்பாக மீண்டும் உறுதிப் படுத்துவதாய் அமைந்துள்ளது.

சோதோம், கொமோரா பட்டணங்களில் மீது கந்தகமும், அக்கினியும் விழும் போது, தேவன் அநேகரை காப்பாற்ற முற்பட்டது அவருடைய உடன்படிக்கையின் சத்தியத்தை கோத்திர தலைவனுக்கு, அதாவது "தேவன் ஆபிரகாமை நினைத்து" என்று ஆதியாகமம் 19:29 சொல்லுகிறது. மேலும், "எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி" (யாத். 6:5-7) உங்களை "விடுவிக்க" இறங்கி வந்தேன் என்றும், அவரது "உடன்படிக்கையை" அவர் "நினைவுகூர்ந்தார்" என்றும் இஸ்ரவேல் ஜனங்களிடம் சொல்லும் படி, கர்த்தர் மோசேயிடம் கூறினார். அதைப்போல, நோவாவின் சரித்திரத்தில், கோத்திர தலைவன் இணைக்கப்பட்டிருப்பது, இரண்டாவது முறை கர்த்தரின் நினைவுகூருதல் முக்கியம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. ஆதியாகமம்

8:1ல் "தேவன் நோவாவை நினைத்தருளினார்" (*ஜகர்*) என சொல்லப் பட்டிருக்கிறது. அவர் ஜலப்பிரளய நீர் குறிப்பிட்ட காலத்தில் வற்றிப்போகும்படி செய்தபோது, பூமியானது மீண்டும் வசிக்கத்தக்கதாக மாறியுள்ளது. கர்த்தர் ஜலப்பிரளயத்தின் போது, நோவாவை நினைவுகூர்ந்ததும், அதன் பிறகு வானத்தில் வானவில் தோன்றி பின்வரும் சந்ததியார் அனைவருக்கும; நோவாவிற்கும், தேவன் அவருடைய உடன்படிக்கையில் உண்மையுள்ள வராயிருக்கிறார் என்பதின் உறுதிப்பாடுமாய் அமைந்துள்ளது. அவரது உடன்படிக்கைகள், அவரது குணாதிசயங்களின் வேராய் அமைந்துள்ளது.

**வசனம் 17.** அந்த வில் **பூமியின் மேலுள்ள மாம்சமான யாவுக்கும், நான் ஏற்படுத்தின** [என்னுடைய] **உடன்படிக்கையின் அடையாளம்** என்று நோவாவோடே சொன்னார். இங்கு குறிப்பிட்டுள்ள "அடையாளம்" (אוֹת, *'oth*, ஓத்) என்ற வார்தையானது பல இடங்களில் காணப்பட்டபோதும், குறிப்பாக, தேவனின் அற்புத செயல்கள்; எகிப்திலும், வனாந்திர யாத்திரையிலும், மற்றும் கானானை சுதந்தரித்த போதும் (யாத். 7:3; எண். 14:11, 22; உபா. 4:34; 11:3; யோசுவா 24:17, 18) தெரிய வந்துள்ளது. விருத்தசேதன முறை (ஆதி. 17:11), இஸ்ர வேலின் ஜனங்கள் அவர்களது யாத்திரை முடிந்தபின், சீனாய் மலையில் தேவனை ஆராதித்த முறை (யாத். 3:12), எகிப்தில் இஸ்ரவேலர் அவர்களது வீடுகளின் நிலையின் மேற் சட்டத்திலும் வாசலின்; நிலைக்கால்கள் இரண்டிலும் இரத்தத்தை தெளித்ததும் (யாத். 12:7, 13), ஓய்வு நாளை ஆசரித்த முறை (யாத். 31:16, 17) மற்றும் தீர்க்கதரிசிகளின் பலவிதமான அடையாள செயல்களும்; (ஏசாயா 20:3; எசே. 4:3), *ஓத்* "அடையாளம்" என்பது அற்புதம் அல்லாத செயல்கள் என பொருள் படுவதற்கு சான்றாக அமைந்துள்ளன.

தேவனின் வெளிப்பாட்டின் மூலம் மக்கள் அடையாளத்தின் முக்கியத்துவத்தை உணர்வதால், அடையாளங்கள் என்பது, எப்போதும் தவறாமல் விளக்கம் தருவதாக இருக்க வேண்டும். "அடையாளங்களின் வெளிப்பாடானது, அதற்கு இணையான வார்த்தையான அடையாளத்தை விளக்கும் வெளிப்பாடின்றி வேறில்லை"[10] அடையாளங்கள், அற்புத செயல்களாகவோ அல்லது அவை அல்லாமலோ இருந்தாலும், அவைகள் தேவ பிரசன்னத் தையும், அவரது நோக்கத்தையும், சில நேரங்களில் தெய்வீக கடமைகளில் மனிதனிடம் எதிர்நோக்கி குறிப்பிடப்பட்டவைகளாய் உள்ளன. வானவில்லை பொறுத்தவரை, அது ஒரு நினைவுகூருதல் மற்றும் தேவனுக்கும் ஒவ்வொரு ஜீவ இராசிகளுக்கும் இடையேயுள்ள உடன்படிக்கையின் எதிர்கால அடையாளமுமாகும். அவர் பூமி முழுவதும் ஜலப்பிரளயத்தினால் மூடப்பட்டு நோவா காலத்தில் செய்தது போல எல்லா ஜீவ இராசிகளையும் நிக்கிரகம் பண்ணமாட்டார். வானவில்

ஆனது, தேவனின் இரக்கம் மற்றும் எல்லா எதிர்கால சந்ததியாரின் மேலுள்ள கிருபை குறிப்பாக உலகத்திற்கு வரப்போகிற நியாயத்தீர்ப்பிற்கு (சிறையிருப்பு மற்றும் இரத்த சாட்சியின் மரணம்) இடையே உள்ள அவருடைய ஜனங்களின் மீதே ஆகும் (காண்க எசே. 1:28; வெளி. 4:3, 10:1).

"அந்த வில் மேகத்தில் தோன்றும் போது, தேவனுக்கும் பூமியின் மேலுள்ள சகல வித மாம்ச ஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கை" யின் அடையாளமாக "நினைவு கூரும்படிக்கு" நான் "அதை நோக்கிப்பார்ப்பேன்" (9:16) என்பது, நோவா பேழையில் இருந்து வெளிவருவதற்கு முன்பு, மேகத்தில் வானவில் தோன்றியது இல்லை என பொருள்பட இருக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவன் ஒரு வானவில்லை கொடுத்தார் என்பதின் முக்கியத்துவம், இதற்கு முன் இதைப் போன்று வெளிப்படவில்லை என்று சாதாரண குறிப்பாக அமைந்திருக்கலாம். இந்த மாதிரியான தருணம், ஆபிரகாமின் சரித்திரத்திலும் காணப்பட்டது. பல வருடங்களாக தேவனுடன் சஞ்சரித்த விசுவாசிகளின் தகப்பன் என அழைக்கப்பட்டவனுக்கு, தேவன் விருத்தசேதனத்தின் மூலம் அவனது "மூதாதையருக்கும் அவனது சந்ததியார் அனைவருக்கும் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தினார்" (17:9-14). தொல் பொருள் ஆய்வின் சான்றுகள் குறிப்பிடுவது என்னவென்றால், பரம்பரை தலைவனின் காலத்திற்கு முன்பே மனித குல மக்களிடையே நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணுவது பழங்கால சடங்குகளாக கடைப்பிடித்ததை எடுத்துக்காட்டுகின்றன.[11] ஆபிரகாம் தனது 99வது வயதிலே விருத்தசேதனம் செய்து கொண்டது, எப்படியும் அது ஒரு சரீர ரீதியான அடையாளமாயினும், தேவன் தனது உடன்படிக்கையின் உறவினை அவருடைய மக்களிடம் வைத்துக் கொண்டார்.

அதைப் போலவே, ஏற்கனவே வனாந்திரத்தில் இஸ்ரவேல் புத்திரர் ஓய்வு நாளின் கட்டளையை கடைபிடித்திருந்த போதும் (யாத். 16:22-30) இஸ்ரவேல் புத்திரர், சீனாய் மலையிலே ஓய்வுநாளின் உடன்படிக்கையைப் பெற்றுக் கொண்டபொழுது, அது ஒரு புதிய அர்த்தத்தை கொடுக்கும் அடையாளத்தின் (*ஓத்*) உடன்படிக்கையாகவும், கர்த்தர் அவர்களுடன் பண்ணினதுமாக (யாத். 31:16, 17) ஏற்றுக்கொண்டார்கள். ஆகையால், ஆபிரகாம் அல்லது இஸ்ரவேல் புத்திரரின் வெகு காலத்திற்கு முன்பே, தேவன் வானவில்லை நோவாவுடனும், அவருக்கு பின்வரும் மனுக்குலத்திற்கும் அவரது உடன்படிக்கையை ஓர் அர்த்தமுள்ள அடையாளமாக (*ஓத்*) வைத்திருக்கவேண்டும். தேவன் தமது வாக்குறுதியில் எப்போதும் நிலைத்திருப்பதால், அவர் ஒரு போதும் திரும்ப பூமியையும், அதில் உள்ள ஒவ்வொரு ஜீவ இராசியையும் ஜலப்பிரளயத்தினால் நிக்கிரகம் பண்ணுவதில்லை.

## நோவாவின் சாபமும் ஆசீர்வாதங்களும் (9:18-29)

தேவனின் புத்தம் புதிய உலகத்திலும், மனித குலம் இதற்கு முன்பு இருந்ததைப் போல் அல்லாமல், பாவத்தைப் பிறப்பிப்பதிலும், அநீதி பெருகுவதிலும் மற்றும் தரமற்ற தீர்ப்பு வழங்குவதாயும் உள்ளது. உலகமானது மறுபடியும் ஜனம் பெருக்கமான போது, ஜனங்கள் தெய்வ பயத்திற்கும் பாவத்திற்கும் இடையே தினமும் எதைத் தேர்வு செய்வது என்ற பெரும் பாரத்தை இதற்கு முன்பு போல சுமந்து செல்ல வேண்டி இருந்தது.

### நோவாவின் வம்சம் (9:18, 19)

**18பேழையிலிருந்து புறப்பட்ட நோவாவின் குமாரர், சேம், காம், யாப்பேத் என்பவர்களே. காம் கானானுக்குத் தகப்பன். 19இம்மூவரும் நோவாவின் குமாரர்; இவர்களாலே பூமியெங்கும் ஜனங்கள் பரம்பினார்கள்.**

**வசனம் 18.** நோவாவும் அவருடைய குமாரர்கள் சேம், காம், யாபேத் (6:9, 10) என்பவர்களின் குறிப்போடு ஜலப்பிரளயத்தின் சரித்திரம் ஆரம்பமானது. அதே வழியில், பரம்பரைத் தலைவனும் அவனது குமாரர்களுடன் முடிவடைவதாக மற்றொரு கூற்று உள்ளது: **பேழையிலிருந்து புறப்பட்ட நோவாவின் குமாரர் சேம், காம், யாப்பேத் என்பவர்களே. காம் கானானுக்குத் தகப்பன்.** அதில் நோவாவின் சாபம் ஆதியாகமம் 9:25ல் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. வாக்குத்தத்த பூமியில், ஆபிரகாமின் வம்சாவழிகளுக்கும் (இஸ்ரவேல் புத்திரர்) கானானியருக்கும் எதிர் காலத்தில் முரண்பாடு உண்டாவதற்கு நிழலாட்டமாக அமைந்துள்ளது என கூறப்படுகிறது.

**வசனம் 19.** நோவாவின் குமாரர்களாலே, **பூமியெங்கும் ஜனங்கள் பரம்பினார்கள்** என்று இந்நூலின் ஆசிரியர் கூறியுள்ளார். இந்த குடும்பம் பலுகிப் பெருகுவது ஆதியாகமம் 9:1ல் கூறியபடி, தேவன் நோவாவையும் அவன் குமாரனையும் ஆசீர்வதித்து, “நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்” என்பது அவர்களது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதாய் உள்ளது.

### நோவாவின் புத்தியீனம் (9:20, 21)

**20நோவா பயிரிடுகிறவனாகி, திராட்சத்தோட்டத்தை நாட்டினான்; 21அவன் திராட்சரசத்தைக் குடித்து, வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்தான்.**

**வசனம் 20.** ஜலப்பிரளயத்திற்கு பின்பு, **நோவா** தன்னையும், தன்

மனைவியையும் ஆதரிக்க **திராட்சைதோட்டத்தை** பண்படுத்துவதும், **பயிரிடுவதும்**, நடத்துவதும் அவசியமாக இருந்தது. எபிரெய நேரடி மொழிபெயர்ப்பில் "மண்ணின் மைந்தனான நோவாவும் திராட்சை தோட்டத்தை நடத்தத் துவங்கினான்."[12] "நோவாவே பூமியின் மண்ணை உழுத முதல் உழவன்" என (RSV) மொழிபெயர்ப்பு கூறிய போதிலும், பிற மொழிபெயர்ப்புகள் "நோவா" திராட்சைத் தோட்டத்தை நட்ட முதல் மனிதன் (NRSV; NJPSV) போன்ற மொழிபெயர்ப்புகள் ஆலோசனை கூறுகின்றன. யூத விவிலிய கல்வியில், நோவாதான் "திராட்சைத் தோட்டத்தை நட்ட முதல் மனிதன்"; என கூறிய போதிலும், "அவன் திராட்சை ரசத்தைக் குடிப்பதால் வரும் கேடான பின் விளைவுகளை அறிந்திருக்கமாட்டான்" என்று கூறுகிறது.[13]

ஆதாமும், காயீனும் ஆரம்ப காலத்தில் இருந்தே மண்ணை பண்படுத்தி இருந்த போது, எவ்வாறு "நோவாவே மண்ணை பண்படுத்தின முதல் உழவன்" என பார்ப்பதற்கு கடினமாக இருக்கிறது (2:15; 3:17-19; 4:2, 3). அதனுடன், வேத வசனம் "நோவா தான் முதன் முதலில் திராட்சை தோட்டத்தை நட்டான்."[14] என்றோ அல்லது அதிகப்படியாக திராட்சை ரசத்தை பருகி தள்ளாடிய முதல் மனிதன் என சுட்டிக் காட்டவில்லை. இந்தப்படியான நடவடிக்கைகள், நோவாவின் குடிப்பழக்கத்தை மன்னிப்பதற்கோ அல்லது தவறான செயல்கள் செய்வதில் இருந்து தவிர்ப்பதற்காகவோ எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாக தெரிய வருகிறது. படைப்பின் ஆரம்பத்தில் இருந்தே, நீண்ட காலமாக, அதாவது நோவாவின் காலம் வரையிலும் திராட்சை ரசமானது ஒரு போதை தரும் பானமாக கண்டுபிடிக்கப்படவில்லை என்பது ஒரு விசித்திரமான காரியமாக காணப்படுகிறது. "நோவா, தோட்டத்தை பயிரிட ஆரம்பித்தான் என்பது, தான் பயிரிடவும், பயன்படுத்தவும் அறிந்திருந்த ஒரு செடியை பயிரிட ஆரம்பித்தான் என்பதே மிகவும் நோவா சரியான வியாக்கியாளமாய் இருக்கும்."[15]

**வசனம் 21.** நோவா என்பவன் தேவனுடன் சஞ்சரித்தவனாயும், நீதிமானாயும் இருந்தபோதிலும, அவன் பாவத்திற்கு மேலான வனாக இருப்பதாக எண்ணிவிடாமல் நாம் அவனை பற்றி நினைப்பதில் கவனமாய் இருக்க வேண்டும். வேதவாக்கியம் **அவன் திராட்சரசத்தைக் குடித்து, வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப்படுத்திருந்தான்** என்று தெளிவாக கூறுகிறது. நோவா ஏன் நிர்வாணமாய் அவனுடைய கூடாரத்தில் படுத்துக் கொண்டிருந்தான் என நமக்கு சொல்லப்படவில்லை. பழங்காலங்களில் கிழக்கு மற்றும் மத்தியதரை கடல் பகுதியில் உள்ள மக்கள் கோடை காலங்களில் நிர்வாணமாய் தூங்குவது நடைமுறையாக அமைந்திருந்திருக்க வேண்டும் (வெளி. 16:15).[16] நோவாவின் நிர்வாணம் தெளிவாக வேறு பட்டதாய் உள்ளது. அவன் தன் மனைவியுடன் உடலுறவு கொள்ளுவதற்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தான் அல்லது அந்த

போதையில் அவனுடைய கட்டுப்பாட்டை மீறி தனது தீர்ப்பில் குறை உள்ளவனாகி தகாத முறையில் நடக்க வைத்தது என்று சிலர் அனுமானித்துள்ளார்கள்.

## காமின் பாவம் (9:22, 23)

**22அப்பொழுது கானானுக்குத் தகப்பனாகிய காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைத் கண்டு, வெளியில் இருந்த தன் சகோதரர் இருவருக்கும் அறிவித்தான். 23அப்பொழுது சேமும், யாப்பேத்தும் ஒரு வஸ்திரத்தை எடுத்துத் தங்கள் இருவருடைய தோள் மேலும் போட்டுக்கொண்டு, பின்னிட்டு வந்து, தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள்; அவர்கள் எதிர்முகமாய்ப் போகாதபடியினால், தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணவில்லை.**

**வசனம் 22.** மறுபடியும் **காம் கானானின் தகப்பன்** என்றும் (காண்க 9:18), அவன் **தன் தகப்பனுடைய நிர்வாணத்தை கண்டான்** என்றும் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதாரமாக, அவனுக்கு தன் தகப்பனுடைய கூடாரத்தில் நுழைவதற்கான அலுவல் எதுவும் இல்லை என்று தெளிவு படுத்தப்பட்டுள்ளது. அவன் கூடாரத்தினுள் ஏதாவது தவறான காரியம் உண்டோ என்ற சந்தேகத்தில் இருந்தானா? அவன் ஆவலாய் இருந்தானா அல்லது அவனது விருப்பம் அவனது தந்தை இழப்பில் விபரீதமான கிளர்ச்சிகளை உண்டாக்குவதாக இருந்ததா? வேத வாக்கியம் அதைப் பற்றி வெளிப்படுத்தாத போது, காம் அவனது தகப்பனின் கூடாரத்தில் நுழைந்ததன் நோக்கத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியாது. ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த போது அவர்கள் உடனே நிர்வாணிகள் என்று அறிந்து வெட்கம் அடைந்தது நமக்கு தெரிந்த ஒன்றாகும் (3:7, 10). பிறகு, சட்டப்படி ஆசாரியர்கள் தங்களுடைய நிர்வாணத்தை மூடும்படிக்கு எச்சரிக்கப்பட்டார்கள் (யாத். 20:26; 28:42). எப்படியாயினும், ஒருவர் அவரது முறையான துணையை தவிர, நிர்வாணத்தை (பாலியல் உறுப்புகள்) மூடாமல் இருப்பது நேரடியாக தடுக்கக் கூடியதும், சட்டத்திற்குப் புறம்பானதும் ஆகும் (லேவி. 18:6-18).

காயீனுடைய பாவத்தைக் குறித்து வேறு கருத்துக்கள் முன் மொழியப்பட்டுள்ளன. அவன் தன் தகப்பனாருடன் தகாத உறவு கொள்ளும் நோக்கத்துடன் இருந்ததாக சிலர் அனுமானித் துள்ளார்கள். அவன் அவனுடைய தாயுடன் பாலியல் தொடர்பு கொள்ள விருப்பம் உடையவனாக இருந்ததாக மற்றுமொறு கருத்து உள்ளது. இந்த கருத்துக்கு சாதகமாக லேவியராகமம் 18:7ஆம் வசனத்தை சுட்டிக் காட்டுகிறார்கள். வேத வாக்கியமானது, "உன்னுடைய தகப்பனது நிர்வாணத்தை" மூடாமலிருப்பது தடுக்கக் கூடிய ஒன்று என்று கூறும்

போது, அது ஒருவனுடைய தாயுடன் தகாத உறவு வைத்திருப்பதை தடுப்பதாகும். இந்த யூகங்கள் எல்லாம் விளக்கங்களை சார்ந்ததாகும். காம் “தனது தகப்பனாரின் நிர்வாணத்தை பார்த்தபோது,” அவன் அவனுடைய **வெளியே இருந்த இரு சகோதரர்களுக்கு சொன்னதாக** சாதாரணமாக வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

காம் அவனுடைய சகோதரர்களிடம் என்ன கூறினான் அல்லது என்ன நோக்கத்துடன் இந்த செயலை சொன்னான் என்றோ பதிவு செய்யப்படவில்லை. அவன் அவர்களை அவர்களுடைய தகப்பனின் நிர்வாணத்தை பார்க்கவும் காமத்தை பகிர்ந்து கொள்ளவும் அழைத்துக்கொண்டிருந்தானா?[17] அவன் அவனுடைய தகப்பனின் பார்க்கமுடியாத வெறிச்செயலை எள்ளி நகையாடினானா? எப்படியிருந்தாலும் அது கேலி செய்யும் வகையில் நடந்ததாகவும் அவனது வயதான தகப்பனாரை அவமதித்ததை காண்பித்ததுடன் அவரை கேலி செய்யும் செயல் வரை கொண்டு சென்றுள்ளது. காமிற்கு அவனது தகப்பன் மீது எவ்வித பச்சாதாபமும் இல்லை என்றும் அல்லது அவரது வாழ்க்கையின் பெலவீன நிலையில் அவரை கனப்படுத்துவதாகவும் அமையவில்லை. பிறகு ஆபகூக் தீர்க்கதரிசி எவரேனும் தன் தோழருக்கு குடிக்கக் கொடுத்து “அவருடைய நிர்வாணங்களைப் பார்க்கும்படிக்கு” (ஆபகூக் 2:15) செய்பவர்களை கண்டிக்கிறார். காம் நோவாவை திராட்ச ரசம் அருந்துவதில் ஈடுபடும்படி உற்சாகப்படுத்தினதாக நமக்குச் சொல்லப்படாத போதும, அவன் அந்த துக்க தருணத்தை தனக்கு சாதகமாக எடுத்துக் கொண்டதாக தெரிகிறது மற்றும் அவரது நிர்வாணத்தை பார்த்துக் கொண்டிருந்தது ஓர் அவமரியாதையை வெளிப்படுத்துகிறது. இருந்த போதிலும், அவனது சகோதரரிடம் சொல்லியதும் அவர்களது தகப்பனின் நிர்வாணத்தை பார்ப்பதற்கு அழைத்ததன் மூலம் தன் மீது தனது பாவத்தை மேலும் குவித்துக் கொண்டான்.

வேதம், காமுடைய துல்லியமான இயல்புகளைக் குறித்து தெளிவுபடுத்தாவிடினும், தகப்பனிடம் முறையாக நடந்து கொள்ளவில்லை என்பது அவன் குணாதிசயமாகும். தங்களது பெற்றோர்களை, பிள்ளைகள் கனம் பண்ணவேண்டும் என்பது பண்டைய காலம் மற்றும் இன்றும் கூட பாரம்பரிய சமூகங்களில் புனிதமான கடமையாக உள்ளது. தேவன் இந்த வரை முறையை பத்து கட்டளைகளில் கீழ்காணும் நிபந்தனைகளுடன் சேர்த்துள்ளார்: “உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக” (யாத். 20:12). ஆகவே, யாரொருவன் அவர்களது தகப்பனையாவது, தாயையாவது கனவீனம் பண்ணுவார்களோ, அவர்கள் மீது பிரதான சாபம் வந்து சேரும் என்று மோசே, சுதந்தரிக்கப் போகும் தேசத்திற்கு சென்று கொண்டிருக்கும் பிளவுபட்ட வழிமுறைகளை கடைபிடிக்கும் இஸ்ரவேல் புத்திரருக்குக் கூறினார். இந்த கட்டளைகளுக்கு, ஒப்புதல்

தெரிவிக்கும் வண்ணமாக, எல்லா ஜனங்களும் “ஆமென்” என்று சொல்ல வேண்டும் (உபா. 27:16).

பெற்றோர்கள் அவமானகரமான வழிகளில் நடக்கும் போது, மகன் “அவரது கையைப் பிடித்தும், திராட்சரசம் பருகி அயர்ந்திருந்தால் அவரை தூக்கிச் செல்ல வேண்டும்”[18] என்பதை அவர்களது (Ugaritic Aqhat epic) யுகரிட்டிக் அகாட் எபிக் படி, இஸ்ரவேல் புத்திரர் ஒருவேளை ஏற்றுக் கொண்டிருக்கலாம். மற்றொரு வகையில், ஒரு உண்மையான மகன் அவனது தகப்பன் கடின பானம் அருந்தியதால் நிதானம் இழந்த தருவாயில் இருக்கும் போது, அவன் அவருக்கு நிதானத்துடன் உதவி செய்வதும, அவரது சமுதாய அந்தஸ்தைக் காக்கும் வகையில், தலைமை தாங்கியோ அல்லது ஒரு தனியான இடத்திற்கு சுமந்து சென்று, அவரை குற்ற உணர்வுடன் பார்ப்பவர்களின் கண்களுக்கு தெரியாதவாறு பார்த்துக்கொள்வான்.

**வசனம் 23. சேமும், யாப்பேத்தும்** அவர்களது சகோதரன் எதைத் தொடங்க முயற்சி எடுத்துக்கொண்டாரோ, அதில் அவர்களுக்கு எந்த உடன்பாடும் இல்லாமல், ஒரு அருவருக்கத்தக்க அல்லது அநீதியான எதிர்ப்பை தவிர்க்க செயல்பட்டார்கள். அப்பொழுது சேமும், யாப்பேத்தும் **ஒரு வஸ்திரத்தை எடுத்துத் தங்கள் இருவருடைய தோள் மேலும் போட்டுக்கொண்டு, பின்னிட்டுவந்து, தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள்; அவர்கள் எதிர்முகமாய்ப் போகாதபடியினால், தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணவில்லை.** பல இழிவான கருத்துப் பாங்குகள் உள்ள போதிலும், காமின் பாவம் உருவானதைக் குறித்து, வேதவாக்கியம், அவன் அவனுடைய தகப்பனின் நிர் வாணத்தையும், குடிவெறியையும் “பார்த்தான்”; இந்நிலையில், அவனது சகோதரர்கள் “பார்க்கவில்லை” என சாதாரணமாக கூறுகிறது. அவர்கள், அடக்கத்துடனும் மிக முன் எச்சரிக்கையுடன் அவர்களது தகப்பனது நிர்வாணத்தை பார்க்காமல், கவனக் குறைவாகக்கூட பார்த்துவிடாதபடி, பின்னிட்டு வந்து, அவரை மூடினார்கள். இப்படி நோவாவைப் பார்க்காமல், அவரை மூடியது சேமும், யாப்பேத்தும் அவர்களது தகப்பனை கனம்பண்ணியதுடன் அவர் வழிதப்பியுள்ளார் என வெறித்து நோக்கும் கண்களிலிருந்தும், அவர் பாதிக்கப்பட்டுள்ள நிலையை வெளிக்கொணர்வதிலிருந்தும், தப்ப வைத்தார்கள்.

## காமின் மகன் கானானின் மீது நோவாவின் சாபம் (9:24, 25)

**24நோவா திராட்சரசத்தின் வெறி தெளிந்து விழித்தபோது, தன் இளையகுமாரன் தனக்குச் செய்ததை அறிந்து: 25கானான் சபிக்கப்பட்டவன், தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்றான்.**

**வசனம் 24.** சில நேரத்திற்கு பின்பு, ***திராட்சை*** ரசத்தின் வெறிதெளிந்த **பின்** நோவா காம் தனக்கு என்ன **செய்தான்** [עָשָׂה, *'aśah*, ஏசா] **என்பதை அறிந்தான்.** இங்கு "செய்தான்" (*ஏசா*) என்னும் வினைச்சொல் சில நேரங்களில் காம் சில உடல்ரீதியான பாலியல் துஷ்பிரயோகம் செய்தான் என்றும் அல்லது தன் தகப்பனுக்கு எதிராக தவறு இழைத்ததாக விளக்கப்படுகிறது. இந்த சூழலில், இந்தப்பதம்; ஒரு வெளிப்படையாக செயல்பட்ட செயல் என குறிப்பிடப்பட அவசியமில்லை. மாறாக இச்செயல் அவன் தன் தகப்பனை மரியாதையின்றி தன் சகோதரரிடத்தில் (அநேகமாக ஏளனமாக) அவர் குடித்திருந்ததினிமித்தம் நிர்வாணமாக கூடாரத்தில்; கண்டதாக கூறியது சாதாரணமாக எடுத்துக்காட்டும் நடந்த ஒரு சம்பவமாக இருக்கலாம். காம் இவ்விடத்தில் நோவாவின் **இளைய குமாரனாக** குறிப்பிடப்படுகிறார் (ஆகிய விளக்கங்களை காண்க 10:21).

**வசனம் 25.** இந்த வசனமே, வேதாகமத்தில் முதலில் நோவாவால் சொல்லப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது: **கானான் சபிக்கப்பட்டவன், தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்றான்.** குலபதியின் சாபமானது, அவரது மகனான உண்மையான குற்றவாளியான காமின் மீது வராமல், அவரது பேரன் கானானின் மீது வந்தது; வெளிப்படையான புரியாத புதிராயிருக்கிறது. கானான் தனித்து வெளியே வந்தது கேவலமான விவகாரத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்று சிலர் ஆராய்ந்து சொல்லியிருந்த போதிலும், வேதவசனம் இதற்கான எந்த சான்றையும் தரவில்லை. இருந்த போதிலும், தேவனாகிய கர்த்தராகிய நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னை பகைக்கிறவர்களைக் குறித்துப் "பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும்; விசாரிக்கிறவராயிருக்கிறேன்" (யாத். 20:5) என்று கூறுவது ஒரு உதாரணமாக இருந்த போதிலும், இந்த உண்மையானது மோசேயின் காலம் வரை முறையாக சொல்லப்படவில்லை.

தகப்பனுடைய பாவத்திற்காக, மகன் தண்டிக்கப்பட்டுக் கொண்டிருப்பது என்ற கருத்து தேவனால் பெரும்பாலும் நிராகரிக்கப்பட்டுள்ளது, ஏனென்றால் முந்தைய தலை முறையினரின் பாவத்திற்காக இந்த தலைமுறையினர் தண்டிக்கப்படுவது நடுவர் தீர்ப்புக்குரியதாகவும் அநியாயமாகவும் ஒலிக்கிறது. உண்மையில் தகப்பனாரின் குழந்தைகளின் செயல்கள், அவர்களது தகப்பனாரின் குணாதிசயங்களை பொறுத்து அமைகிறது என்று அடிக்கடி எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக தோன்றுவதாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நன்மையானதோ அல்லது தீமையானதோ, பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் அவர்களது பெற்றோர்கள், தாத்தா மற்றும் பாட்டி ஆகியோரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி

மனப்பாங்கிலும், நடத்தையிலும் மற்றும் வாழ்விலும் அடிக்கடியோ அல்லது எப்போதாகிலுமோ கடைப்பிடிக்கிறார்கள். பிள்ளைகள் ஒரு விதத்தில் அவர்களின் பெற்றோர்களுடைய பாவத்தினிமித்தம் பாடுபட்டுக் கொண் டிருக்கலாம்: ஆனால் வேதனையை அனுபவிக்கின்றனர்: ஆனால், வழக்கமாக அவர்களது சொந்த கெட்ட தீர்மானங்களாலும் மற்றும் குணங்களாலும் அவர்களது முன்னோர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த அதே சாபம், வேதனை மற்றும் துன்பத்தை தங்களுக்குத் தாங்களே வருவித்துக் கொள்ளுகிறார்கள் என்பதே ஆகும்.

முன்பு ஆதியாகமத்தில் கண்டவாறு, காயீன் கொண்டிருந்த தவறான மனப்பாங்குகள், வெறுப்பு, வன்முறை மற்றும் துன்பங்கள் எல்லாவற்றின் பிரதிபலன், அவனது வம்சாவழிகளின் மத்தியில் அதிகமாக தொடர்ந்து வந்துகொண்டிருந்தாலும், குறிப்பாக லாமேக்கின் வாழ்க்கையில் காணப்பட்டுள்ளது (4:1-24). தேவன், முன்னிருந்த பூமியை சபித்து, ஜலப்பிரளயத்தினால் எல்லாவற்றையும் அடித்துச் செல்லும்படி பண்ணும் வரையிலும் (காண்க 6:17; 7:23; 8:21), இராட்சதர்களின் பொல்லாங்கும் (6:4), பல தலைமுறைகளுக்கு தொடர்ந்து கொண்டிருந்திருக்கக்கூடும். பிதாக்களின் பாவங்கள் மற்றும் பாட்டன்களின் பாவங்களும் கூட பிற்காலங்களில் அவைகள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. அவர்களுடைய நடத்தையும், தண்டனையும் முன் கூட்டியே தன்னிச்சையாக வந்தவைகள் அல்ல, ஆனால் பொல்லாங்கானது, அவர்களது முன்னோர்களின் வாழ்க்கையின் மாதிரியாக மாறி, அவர்கள் வாழ்க்கை வகைப்படுத்தப்படாமல் தொடர்ந்ததன் விளைவாக, அவர்கள் நோவாவின் பிரசங்கத்தை கவனிக்க மறுத்ததால், ஜலப்பிரளயத்தினால் அழிந்து போகும் வரை கொண்டு சென்றது.

நோவாவின் பேரன் கானானைப் பற்றிய காரியத்தில், சாபமானது தீய காரியங்களை முதன்மைப்படுத்தி பார்க்கப்படவில்லை என்றும், அவன் தனிப்பட அனுபவித்திருக்க வேண்டும் என்றும் தெரியவருகிறது: பரந்த அளவில், அது எதிர்பார்க்கப்பட்டதும், அவனது வம்சாவழிகளின் மீது வந்ததும், பல தலைமுறைகளுக்குப் பிறகு, இஸ்ரவேலர் கானானிய மக்கள் மீது படையெடுத்து, இறுதியில் வாக்குத்தத்த பூமியை சுதந்தரித்துக் கொண்டார்கள். இந்த பார்வையில், இக்கூற்று சரியாக பொருந்தி வருவதாக காணப்படுவது ஏனென்றால், நோவா கானானின் மீது சாபத்தை சுமத்தியபொழுது "தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான்" என்பதன் மூலம் தெளிவாகிறது. நமக்கு தெரிந்த வகையில், காம் அல்லது கானான் தனிபட்ட முறையில் அவர்களது சகோதரர்களுக்கு பணிவிடை செய்யவில்லை: ஆனால், காமின் பாவம் அடைக்கலமாகி "அவருடைய மகன் கானானின் வம்சாவழிகள் (கானானியர்கள்) அடிமைத்தனத்தின் நுகத்தில் இருந்தும், சேம் மற்றும் யாப்பேத்தின் வம்சாவழிகளுக்கு அடிமைகளாய் இருந்தார்கள்."[19]

காமின் குழந்தைகள், நடுவர் தீர்ப்பின் விதிப்படி, ஒன்றும் அறியாத பாதிக்கப்பட்டவர்களாய் இல்லாத போதிலும், அவர்கள் மீது அழுத்தம் இருந்தது: சாபம் பலித்தது, ஏனென்றால், அவர்கள் காமைப் போல் நடந்தாலும், ஆபாச பாலியல் குற்றங்களிலும் மற்றும் இழிவான குற்றங்களிலும், உருவ வழிபாடு சார்ந்த வாழ்க்கை வாழ்ந்தாலும், அதைக் காட்டிலும், அவர்களது முன்னோர்களை விட இன்னும் அதிகமான பாவ வாழ்க்கை வாழ்ந்தார்கள். இஸ்ரவேலரால், கானானிய பூமி பறிமுதல் செய்யப்பட்டது. ஏனென்றால் அவர்களது பாவம் வானபரியந்தம் எட்டப்பட்டு தேவனால் சகிக்க முடியாததாய் இருந்தது (காண்க 15:16; லேவி. 18:3-30; உபா. 9:4-6).

## சேம் மற்றும் யாப்பேத்தின் மீது நோவாவின் ஆசீர்வாதம் (9:26, 27)

**26சேமுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான். 27யாப்பேத்தை தேவன் விர்த்தியாக்குவார்; அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான் என்றான்.**

**வசனம் 26.** நோவா, குற்றவாளிகளுக்கு எதிரான சாபத்துடன் நிறுத்தவில்லை. **சேமுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக** என்றான். “சேம்” ஆசீர்வாதத்தின் இலக்காக இல்லை, அது “கர்த்தரை” நோக்கியதாய் இருந்தது. வழக்கமாக, ஒருவன் தேவனிடத்தில் இருந்து ஆசீர்வாதத்தை எதிர்பார்க்கிறபோது, அவர் அவனுக்கு உடனடியாக என்ன செய்தார் என்பதை குறிப்பிட்ட வெளிப்படையான பாராட்டின் மூலம் அடையாளம் கண்டு வழிநடத்தப்பட்டுள்ளது. சரியான விளக்கக் குறைவினால், “சேமுடைய தேவனாகிய” “கர்த்தரை” என்று படிப்பவரை நோவா சேமை ஆசீர்வதித்துக் கொண்டிருந்தான் அல்லது பாராட்டிக்கொண்டிருந்தான் என்று நம்புமாறு கொண்டு செல்கிறது. காமைப் போல அல்லாமல், சேம் தேவனுக்கென்று தன்னை அர்ப்பணித்துள்ளான் என்று நோவா உரைத்திருக்க வேண்டும். தேவன் தேர்வு செய்யும் வரிசையில், இதற்கு முன்னர் சேத் மூலம் (4:26) வந்தது போல, இவன் மூலம் தொடர்ச்சியாக வந்திருக்கவேண்டும். மனித பரம்பரைப் பற்றிய ஆய்வின் மூலம் (11:10-26), ஆபிரகாமை அழைத்த காலம் வரை (12:1-3), இது நிச்சயமாக வெளியே பரவியிருக்கிறது.

சேமுடைய தேவனாகிய கர்த்தருக்குத் ஸ்தோத்திரம் என்று சொன்ன பிறகு **கானான் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான்** என்றார். இஸ்ரவேலர் பின்னர் கானானி யருடன் யுத்தம் செய்தும், தேவனுடைய தெரிந்து கொண்ட தேசத்தை இறுதியில் ஜெயம் கொண்டு

சுதந்தரித்துக் கொண்டதைத் தவிர, குலபதியின் இந்த கூற்று புரிந்து கொள்வதற்கு கடினமாக இருக்கிறது. கானானியர் எதிர் காலத்தில் துன்பப்படுவார்கள் என்ற அடிமைத்தனத்தின் விதியானது, காமுடைய பாவம், நடுவர் தீர்ப்புக்குரியது என்பதை அடிப்படையாக கொள்ளாவிடினும், அவர்கள் பொல்லாங்கை வென்று கொண்டிருப்பதையும் பொறுத்து இருந்துள்ளது. காமுடைய வம்சாவளிகளின், அதாவது கானானியர்களின் வாழ்க்கையில், பொல்லாங்கு மற்றும் உருவ வழிபாடு என்னும் சிறிய வெள்ளம் போலிருந்த பாவமானது, பெரு வெள்ளமாக முதலில் மாறி, இறுதியில் பொங்கி எழும் வேகமான நீரோட்டம் போல் பெருக்கெடுத்து ஓடியுள்ளது. எனினும் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர், அவர்களுடைய அக்கிரமம், "முழுமையாகும்" வரை, இந்த தீர்க்கதரிசனம் நிறைவாகவில்லை (15:16).[20] ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனம் திரும்ப வேண்டுமென்று வேண்டி, கர்த்தர் நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (காண்க 2 பேதுரு 3:9).

**வசனம் 27.** நோவாவின் வசீகரமான சாபமும் மற்றும் ஆசீர்வாதமும் கீழ்க்கண்டவாறு உள்ளன; **யாப்பேத்தை தேவன் விருத்தியாக்குவார்.** இந்த விண்ணப்பம், ஆதியாகமம் 9:26ல் உள்ள அவனுடைய ஆசீர்வாதங்களைப் போன்றது என்றும், கானானை மேற்கொண்ட பிறகு தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டுள்ளது என சில பராமரிப்புகளுடன், அவனது பின்னோக்கம் பற்றி எழுதுவதை விட, முன்வைக்கப்பட்டுள்ள பெரிய நிகழ்வுகளுக்கான ஒரு தீர்க்கதரிசனம் என எடுத்துக் கொள்ளப்படடிருக்க வேண்டும்.

மற்றொரு எபிரெய வார்த்தையானது, ஆதியாகமம் 9:27ன் முதல் பகுதியில் காணப்படுகிறது, அதாவது குலபதி தேவனிடம் "பெருகுவானாக" (יַפְתְּ, *yapth*$^{e}$) "யாப்பேத்" (יֶפֶת, *Yepeth*) (யெபெத்). யாப்பேத்தின் குடும்பம் எப்படி பெருகியுள்ளது? என்ன மாதிரியான மக்கள் நோவாவின் இந்த மகன் மூலம் தோன்றியுள்ளார்கள்? ஆதியாகமம் 10:2-5 வசனங்களில், யாப்பேத் என்பவன் இஸ்ரவேல் தேசத்தின் வடக்கு பகுதியில் அதாவது புராதன அனடோலியா (நவீன துருக்கி மற்றும் முன்னான சோவியத் கூட்டமைப்பின் தெற்கு புல் வெளிகளில் உள்ளவர்களையும் சேர்த்து) கிரீஸ் நாட்டிற்கு மேற்கு பகுதி மற்றும் ஏஜியன் பகுதி, பல இந்தோ ஐரோப்பா மக்களையும் சேர்த்து, முன்னும், பின்னுமாக தொகுத்த மக்கள் குழுக்களின் மூதாதையரில் (விலங்கு வகையில்) முதல் மூலமானவன் ஆகும்.[21]

அடுத்த பிரிவானது, **அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்** போதுமான எளிய ஓசையுடனும், ஆனால் "அவன்" என்பது யாரைக் குறிக்கிறது? இந்த உரையாடல், அராமிக் மொழியில் பொழிப்புரைத்துக் கொண்டிருக்கும் போது, "சேமுடைய

வாசஸ்தலங்களில் தேவனுடைய ஷெக்கினா மகிமை தங்கியிருப்பதாக"[22] என்று அங்கோலாவில் உள்ள டர்கூம் இல் குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பழைய யூத விளக்கமானது, கி.பி முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டின்[23] போது, சிறிய புகழ்ச்சியுடன் வந்ததாகும். மேலும், ஒரு பிரதி பெயர் இயற்கையாக, அதனுடைய முன்பு உள்ள நெருக்கமான ஒன்றைத் தழுவியதாக அமைய வேண்டும் என்ற அடிப்படையான இலக்கண விதியை மீறுகிறது. இந்த விதியில், சில விதி விலக்குகள் இருக்குமே தவிர, இங்கே இந்த விதி விலக்கு கொடுக்கப்பட்டிருப்பதற்கான வாதப் பொருத்தமான காரணம் இருக்காது. கர்த்தர், அவர்கள் நடுவிலே பரிசுத்த ஸ்தலத்திலே வாசம் பண்ணுகிறார் (யாத். 25:8, 29:42-46), ஆனால், அந்த கருத்தானது, இங்கே கலந்துரையாடலாக வரவில்லை. "யாப்பேத்தை" "தேவன் விருத்தியாக்குவார்" மேலும் "அவன்" (யாப்பேத்) "சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்" என்ற கூற்றானது, "தேவனுக் கென்று" ஒரு வசீகரமேயன்றி வேறொன்றுமில்லை.

இந்த விண்ணப்பத்தில் புதைந்துள்ள ஞானம் (இயற்கை அறிவு) என்னவென்றால், நோவா யாப்பேத்தினுடைய எல்லையையும், செல்வாக்கையும் தேவன் விருத்தியாக்குவாராக என்றும், அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான் என்று கேட்டுக் கொண்டிருந்தான் என்பதே ஆகும். நியாயாதிபதிகளின் காலத்திலும் மற்றும் சவுலின் காலத்திலும், கிரேட் மற்றும் ஏஜியன் தீவுகளிலும் இருந்து பெலிஸ்தியர்கள் படையெடுத்து, அதிகப்படியான இஸ்ரவேலரை அடிமைப்படுத்தியதன் மூலம், இது நிறை வேறியுள்ளது என்று சிலர் நம்புகிறார்கள். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில், பலஸ்தீனாவை ஆட்சி செய்த செலுஸ்திய ராஜா, எபிப்பேனஸ் IV பாலஸ்தீனத்தை ஆட்சி செய்த காலமாக இருக்கலாம் என மற்றவர்கள் நினைத்து சுட்டிக் காட்டுகிறார்கள். யாப்பேத்துடைய வம்சாவளிகள், சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பார்கள் என்பதிலிருந்து, அவ்வாறு நிறைவேறும் தீர்க்கதரிசனம் ஒரு சாபமாக இருந்திருக்கும்.

மிகவும் மாறான இந்த கூற்று, "யாப்பேத்துடைய" வம்சாவளிகளை "சேமுடைய கூடாரங்களில்" "குடியிருக்கும்படி" (சமாதானமாய்) செய்வார் என்பது நோவாவுடைய ஆசீர் வாதங்களின் ஒரு பகுதி ஆகும். புதிய ஏற்பாட்டின் சாகாப்தம் வரை, இந்த தீர்க்கதரிசனம், சரித்திரத்தில் எந்த ஒரு காலத்தில் சரியானபடி நிறைவேறியது என்பதைக் கண்டு பிடிக்க கடினமாக இருக்கிறது. நோவா, தேவனிடம் விண்ணப்பித்த விண்ணப்பங்கள் பூர்த்தியான முடிவிற்கு பிறகு, சிரியாவில் உள்ள அந்தியோகியா துவங்கி தர்சு பட்டணத்திற்கும், கலாத்திய நகரங்களுக்கும் ஏஜியன் கடலுக்கு குறுக்கே உள்ள எபேசு பட்டணத்திற்கும், மக்கதோனியாவிற்கும், கிரீஸிற்கும் மற்றும் முன்னும் பின்னுமாக பல பட்டணங்களுக்கும், பவுல் சுவிசேஷ பயணங்கள்

மேற்கொண்டதே ஆரம்பமாகத் தெரிகிறது. இந்த இடங்களில், யாப்பேத்தினுடைய வம்சாவளிகள் (பிறஜாதிக் கிறிஸ்தவர்கள்), சேமுடைய வம்சாவளிகளுடன் (யூத கிறிஸ்தவர்கள்) இணைந்து ஒரே குடியிருப்பிற்குள் ஆவிக்கிரிய கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் கொண்டுவரப்பட்டனர் (எபே. 2:11-22).

**கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்** என்பது சேமுக்கு மாத்திரம் அல்ல, யாப்பேத்துக்கும் கூட என்பது ஆதியாகமம் 9:27 இல் கூறப்பட்டுள்ள கடைசி கூற்று ஆகும். இது, அந்த சாபத்தை வலியுறுத்தும் வகையில் கானானுடைய எதிர்கால அடிமைத்தனம் கணிக்கப்பட்டுள்ளது என்பது மூன்றாவது முறையாக உள்ளது. ஏற்கெனவே, கி.மு. இரண்டாவது ஆயிரம் ஆண்டு காலத்தின் துவக்கத்தில் (ஆபிரகாமின் காலத்தில்), ஏராளமான கானானியர் பாலஸ்தீனத்தில் மட்டும் குடியிருந்திராமல், மத்திய தரைக்கடலின் கிழக்கு கடற்கரையோரம், கானான் தேசத்தின் வடபகுதி (நவீன லெபனானில் இருந்து சிரியாவில் உள்ள யுகரிட் வரை) குடியிருந்தனர்.[24] பண்டைய நூல்களின்படி, கானானியர்களால் பிடிக்கப்பட்டு, அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்த இடங்களில் நீண்ட காலமாக குடியிருந்த ஏஜியன் தீவுகளில் இருந்து வந்த கடற்கரை மக்களும் (யாப்பேத்தின் வம்சாவளியினர் சிலர் உள்ளனர்) இடம் பெயர்ந்து இஸ்ரவேலர் அடைந்த வாக்குத்தத்த பூமிக்குச் செல்ல, நீண்ட காலம் ஆகவில்லை என தெரியவருகிறது. இந்த நிகழ்வுகள், யாப்பேத்தின் மீது பொழிந்த நோவாவின் ஆசீர்வாதம் நிறைவேறுதலின் ஒரு பகுதியாக இருக்கலாம் என கருதப் பட்டுள்ளது.

## நோவாவின் மரணம் (9:28, 29)

**28ஜலப்பிரளயத்துக்குப்பின்பு நோவா முந்நூற்று ஐம்பது வருஷம் உயிரோடிருந்தான். 29நோவாவின் நாட்களெல்லாம் தொளாயிரத்து ஐம்பது வருஷம்; அவன் மரித்தான்.**

நோவாவின் சரித்திரமானது, ஆதியாகமம் 5:3-32 வரை சொல்லப்பட்டுள்ள வம்ச அட்டவணையில், சேத் வம்சம் துவங்கி, நோவாவுடைய மரண செய்தி வரை இரண்டு பிரிவுகளுடன் முடிவடைகிறது.

**வசனம் 28.** 5ம் அதிகாரத்தை விவாதிக்கும் பொழுது அந்த புராதன பதிவுகளின்படி, “10” என்ற எண்ணானது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் காண முடிகிறது. மூதாதையரின் வம்ச அட்டவணையில், நோவா பத்தாவதும், கடைசியுமான இடத்தை பிடித்துள்ளார். இங்கே, **ஜலப்பிரளயத்திற்கு பின்பு, நோவா முந்நூற்று ஐம்பது வருடம் உயிரோடிருந்தான்** என விவிலியத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, அவன் ஜலப்பிரளயத்திற்கு முன்பு உள்ள உலகத்திற்கும் அதைத்

தொடர்ந்து வந்துள்ள ஜலப்பிரளயத்திற்கு பின்பு உள்ள உலகத்திற்கும் முக்கியமான பாலமாக அமைந்துள்ளான்.

ஆதியாகமம் 5ம் அதிகாரத்தில் "சேத்திற்கு மற்றும் வேறு குமாரர்களும், குமாரத்திகளும்" உள்ளார்கள் என்ற வழக்கமான சேத்துடைய வம்சாவளிகளைப் பற்றி தெரிவிக்கும் விளக்கம் தவிர்க்கப்பட்டுள்ளதை காணமுடிகிறது. இந்த விடுபடுதல், ஜலப்பிரளயத்திற்கு பின்பு, மனித இனமானது, நோவாவுடைய மூன்று மகன்களான சேம், காம், மற்றும் யாப்பேத்தினுடைய வம்சாவளிகளின் மூலம் உருவானது என்ற கருத்து தெரிய வருகிறது.

**வசனம் 29.** குலபதியின் மரண செய்தியின் கருத்து, **நோவாவின் நாட்களெல்லாம் தொளாயிரத்து ஐம்பது வருஷம்; அவன் மரித்தான்.** யுட்னபிஷ்டிம் (Utnapishtim) என்ற புராணக் கதையில், பாபிலோனிய நோவா ஜலப்பிரளயத்திற்கு பின்பு எல்லா தேவர்களைப்போல இறவாத தன்மையில் உள்ளதாக சித்தரிக்கப்பட்டுள்ளது.[25] ஆதியாகமம் 5:3-32 வசனம் வரை கூறப்பட்டுள்ள வம்ச அட்டவணையில் ஏனோக்கைத் தவிர, உண்மையான நோவாவும் மரணத்தைத் தழுவினான்: "அவன் மரித்தான்" என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

## நடைமுறைப்படுத்துதல்

### தேவனுடைய கிருபையின் ஆசீர்வாதங்கள் (9:1-20)

ஒரு வழியில் பார்த்தால், நோவா, இரண்டாவது ஆதாமாக இருந்துள்ளான். ஜலப்பிரளயத்திற்கு முன்பு உள்ள பொல்லாங்கு நிறைந்த ஜனங்களை, ஜலப்பிரளயம் அடித்துச் சென்ற பிறகு, அவனும், அவனது குடும்பமும், பேழையை விட்டு ஒரு புதிய உலகத்திற்குள் காலடி எடுத்து வைக்கிறார்கள். தேவன், அவரது கிருபையால், மனித குலத்திற்கு, ஒரு புதிய ஆரம்பத்தை துவக்கி வைத்துக் கொண்டிருந்துள்ளார். ஏதேன் தோட்டத்தில், ஆதாம் மற்றும் ஏவாளின் பாவத்தினால் மனித இனத்தின் மீது வந்த சாபத்தை ரத்து செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது, ஆயினும், சிருஷ்டிப்பின் போது உள்ள சில மாறாத ஆசீர்வாதங்களை மறுபடியும் தந்தார். புதிதாக உருவான மனித குலத்தின் முன்னோர்களுக்கு, அவர் சில கூடுதலான ஆசீர்வாதங்களையும் தந்தார்.

*ஏற்பாடு 1: மனித சமுதாயம் விர்த்தியாகுதல்* (9:1, 7). சிருஷ்டிப்பின் போது முதல் கட்டளையும், மற்றும் ஆசீர்வாதமும் கொடுக்கப்பட்டது (1:28). நோவாவினுடைய குடும்பத்தில், ஜலப்பிரளயத்தினின்று மீண்டு வந்தவர்களை "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்" (9:1, 7) என்ற வாக்குத்தத்தம் இரு முறை திரும்பவும் கூறப்பட்டுள்ளது. திருமண சடங்கானது, தேவனால் உண்டாக்கப்பட்ட ஒரு புனிதமான அமைப்பு

என்பதை மறுபடியும் உறுதிப்படுத்தியுள்ள போதிலும் (2:22-25; காண்க மத். 19:4-6) பாலின உறவை உயர்த்துவதற்கும், அதற்கு மேலாக அவமதிப்பு உண்டாக்குகிற சங்கங்களுக்கு விலகி, சமுதாயத்தில் ஸ்திரத்தன்மையை ஊக்குவிப்பதற்கும் ஆகும். அடக்கமுடியாத உணர்வுகள் மற்றும் கட்டுப்பாட்டுக்கு உட்படாத மாமிச உணர்வுகளை அனுபவிப்பதில் இருந்து மனிதனை விடுவிக்க, தேவன் மேற்கொண்ட முயற்சியாக இது உள்ளது. இந்த புனித அமைப்பு இடிக்கப்பட்டதன் காரணம், பலதரப்பட்ட பழக்கத்தை பயிற்சி செய்ததும், மற்றும் தவறான காரணங்களுக்காக திருமணம் செய்து கொண்டதும், இவைகள் மூலம் உலகத்தினுடைய அதிகப்படியான ஒழுக்கக்கேடு தெரிய வந்துள்ளது.

ஆதாம் மற்றும் ஏவாளின் வம்சாவளிகள், பரவலாக பாவத்தில் விழுந்து, உலகம் முழுவதும் பாவத்தினால் நிறைந்து விட்டது. சேத் நீதிமான் வரிசையில் இருந்த போதிலும், உண்மையான தேவனைப் பற்றிய அறிவு உணரப்பட்டதும் மற்றும் அது அவர்களது வம்சாவளிகளும் கடைபிடிக்குமாறும் உள்ளது. இந்த முறை, நோவாவின் வாழ்வில் உச்ச கட்டத்தை அடைந்தது. மனிதனின் இயற்கை குணம் பாவமாயிருந்த போதிலும், தேவன் மனித இனத்திற்கு இறுதி மீட்பு கிடைக்கப் பெற, நோவாவின் புத்திரனான சேம் மூலம் (10:21-31), அதாவது ஆபிராமுடைய (அல்லது ஆபிரகாம்: ஆதியாகமம் 11:10-26) முன்னோர் வழி வந்தவனும் மற்றும் கடைசி வம்சாவளியில் இயேசு கிறிஸ்து (மத். 1:1-17; கலா. 3:8-29) வருமாறு தேவன் செய்ததும், அவர் இன்னும் வரையறுக்கப்பட்ட மனித குலத்திற்காக கிருபையுடன் பாடுபட விருப்பம் உள்ளவராய் இருந்துள்ளார் என தெரிய வருகிறது.

வேதத்தின்படி, பிள்ளைகள் கர்த்தரால் வரும் ஈவு என்று கருதப்பட்டுள்ளது. நிறைய குழந்தைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் இருப்பது, எப்போதும் தெய்வீக தயவு உள்ளத்திற்கான சான்றாக காண்பிக்கப்பட்டுள்ளது (24:60; சங். 127:3-5; 128:3, 4). பலவிதமான நாடுகளில், கருக்கலைப்பு விகிதத்தின் சாட்சியின்படி, உலகத்தில் அதிகப்படியாக, குழந்தைகளை இப்போது அந்த வகையில் பார்ப்பதில்லை என்பது துயரமானதாகும். ஒரு குழந்தையின் கருவை கலைப்பது, விவிலிய காலங்களில், தேவனுடைய ஜனங்கள் எடுத்துக் கொண்டதாக தெரியவில்லை. வாழ்க்கை, தேவனுடைய ஈவு மற்றும் குழந்தைகள் கர்த்தரால் வரும் ஆசீர்வாதம் என்றும் மற்றும் அன்புடனும், பாதுகாப்புடனும் இருக்க வேண்டும் மற்றும் அவர்கள் அவருடைய மகிமையின் பிரதிபலன் என்றும் அறிந்திருந்தார்கள்.

*ஏற்பாடு 2: மனித வாழ்வில் உணவு பதார்த்தங்கள்* (9:2-4, 20). ஜலப்பிரளயத்திற்கு முன்பு, மிருகங்களின் மாமிசத்தை, மனிதர்கள் உட்கொண்டார்களா அல்லது இல்லையா என்பது குறித்து வேதம் எந்த ஒரு விளக்கமும் தரவில்லை. மனிதன் பாவத்தினால் விழுந்து போன பிறகு, நிறைய ஜனங்களுக்கு கூட இருப்பவர்களின் இரத்தத்தைச்

சிந்துவதைக் குறித்து எந்தவித கவலையும் இல்லாமல் இருந்து கொண்டிருந்தார்கள் என்றும் (4:8, 14, 23, 24; 6:11) மற்றும் அவர்களது ஆகாரத்திற்காக மிருகங்களைக் கொல்லுவதற்கும், தயங்கியிருக்க மாட்டார்கள் என்பதும் சந்தேகமில்லாத ஒன்று என்பது நாம் அறிந்து கொண்டதே ஆகும். நோவாவும், அவனது குடும்பமும், பேழையை விட்டு வெளியே வந்தபின், தேவன் இவ்வாறு மிருகங்களை கொல்லுவதற்கு, பிற்காலங்களில் அனுமதித்திருக்க வேண்டும் என்பதும் மற்றும் இதுவே நடைமுறைக்கு வந்த ஒரு முதல் திட்டவட்டமான அங்கீகாரம் ஆகும். நோவா புதிய உலகத்தில் பயிரிட்டு, உண்பதற்கு விதைகளையும் பேழைக்குள் கொண்டு வந்திருந்தான் (9:20) என்பதுடன், தேவன் மனித இனத்தின் ஆகாரத்திற்காக, உலகில் உள்ள ஒவ்வொரு மிருகங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், தரையில் ஊரும் ஊர்வனவற்றையும் மற்றும் சமுத்திரத்தில் உள்ள மச்சங்களையும் கையளித்திருந்தார் (9:3).

தேவன், இந்த எல்லா உயிரினங்களுக்கும் மனிதனைப்பற்றிய பயமும், அச்சமும் இருக்குமாறு படைத்திருந்தார் (9:2). நாம் அதிகமாக வேட்டையாடியதால், அவைகள் இறந்து போயின என்ற உள்ளுணர்விலிருந்து அவர்கள் விடுபட்டிருக்க வேண்டும் என்பது, இந்த மாற்றத்தின் மூலம் உண்டாயிருக்க வேண்டும். மனித இனமும் மற்றும் மிருகங்களும் உயிர்வாழ அது மிருகங்கள் அல்லது காய்கறிகளாயிருந்தாலும் அவர்கள் மற்ற உயிரினங்களைக் கொன்றால்தான்; உயிர் வாழ முடியும் என்ற நிபந்தனை உள்ளது. ஆகாரத்திற்காக எல்லா மிருகங்களின் மாமிசத்தைப் புசிக்கலாம் என்ற போதிலும் மாமிசத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடு புசிக்க வேண்டாம் (9:4) என்ற வரம்பையும், அவர் மனிதனுக்கு வைத்திருந்தார். மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது, மற்றும் இது கர்த்தரிடத்திலிருந்து வந்தபடியால், இந்த உயிரானது மகத்துவமானது, மதிக்கப்பட வேண்டும் என்று தேவன் நோவாவிடம் சுருக்கமாகவும், பிறகு மோசேயிடம் அவர் அதிக விளக்கங்களுடனும் விவரித்துள்ளார் (லேவி. 3:17; 7:26, 27; 17:10-14; உபா. 12:16, 23-25; 15:23).

விரும்புகிறதற்கும், தேவைகளுக்கும் இடையே வேறுபடுத்திப் பார்ப்பதில் மனிதனுக்கு எப்பொழுதும் ஒரு சிக்கல் உள்ளது. நாம் சிலவற்றை பார்க்கும் போது, அது நமது விருப்பத்திற்கு உட்பட்டது என்றும், அந்த விருப்பமானது நமக்கு அவசியமான ஒன்றாக இருந்த போதிலும், நாம் விரும்பியது கிடைக்காவிடில் நாம் உயிர் வாழ்வது கடினம் என்று சிந்திக்க துவங்குவதும் மற்றும் முறையிடுவதும், பகுத்தறிவிற்கு ஏற்றவாறு, அது “தேவை” என்று காட்டப் பட்டுள்ளது. தேவன் ஏதேன் தோட்டத்தில் ஆதாமையும், ஏவாளையும் வைத்திருந்த ஆரம்பத்தில் இருந்து, இது மனித இனத்தின் பலவீனமாக இருந்து வந்துள்ளது. அவர் அவர்களுக்கு தேவையானவைகள் எல்லாவற்றையும்

வழங்கியுள்ளார். அவர்களுக்கு எல்லாவகையான கனிமரங்களாகிய சகல வித விருட்சங்களும் ஆகாரமாக இருந்தன. அவர்கள் பாவம் செய்த பின்பு, அவர் அவர்களுக்கு தோல் உடைகளை உண்டாக்கவும், மற்றும் உடுத்துவிக்கவும் கூட செய்தார் (1:29; 2:9, 16; 3:21). ஆகாரமும், உடையும் மனிதனுடைய இரண்டு அடிப்படைத் தேவைகளாய் இருந்த போதிலும், இயேசு அவரது மலைப் பிரசங்கத்தில், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று கலைப்படாதிருங்கள் என்று திரளான ஜனங்களைப்பார்த்து கூறியுள்ளார். இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால் உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா என்றும், மற்றும் ஆகாயத்துப் பட்சிகளுக்கு பிழைப்பூட்டுகிறார் என்ற பொழுது தம்மிடத்தில் அன்பாயிருக்கிற தம்முடைய சொந்த பிள்ளைகளுக்கு உடுத்துவிப்பதையும், போஷிப்பதையும் நம்முடைய பரம பிதா அறிந்திருக்கிறார் என்பதை வலி யுறுத்தியுள்ளார். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார் (மத். 6:25-32).

அப்போஸ்தலனாகிய பவுலும், இதை ஏற்றுள்ளார். “உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால அது போதுமென்றிருக்கக்கடவோம்” (1 தீமோ. 6:8), என மனிதனுடைய அடிப்படைத் தேவைகள் இரண்டு மட்டுமே என்று சுருக்கமாக, அதைப் போலவே அவர் சொல்லியுள்ளார். சாதாரண தேவைகளுக்கு வேண்டியவைகளை வைத்திருப்பது தவறு என்று இது அர்த்தம் கொள்ளாமல், அளவுக்கு அதிகமான பேராசை யினால், தவறாக விரும்பியதையெல்லாம் வைத்திருப்பதற்கு எதிரான ஒரு எச்சரிக்கையாக இருக்கிறது. தங்களது சுய விருப்பங்களைப் பூர்த்தி செய்யவும், அதற்கு முயற்சி செய்வதினால் திருப்தி அடைவதற்காக, மென்மேலும் சொத்துக்களைச் சேர்ப்பதற்காகவும் மென்மேலும் சரக்குப் பொருட்களை வாங்குவதற்காகவும், மக்கள் தங்களது வாழ்க்கை நேரத்தை அதிகமாக வீணாக்கும் வலையில் விழுகிறார்கள். பவுல், மனிதர்களை அழிவிலும், கேட்டிலும் மூழ்க வைக்கும் காரியங்களான அறிவு கெட்ட மற்றும் கேடு விளைவிக்கக்கூடிய விருப்பங்களைக் குறித்து எச்சரித்ததுடன் “பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்” (1 தீமோ. 6:9, 10) என்று கூறியுள்ளார்.

*ஏற்பாடு 3: மானிடக் குடும்பத்தின் பாதுகாப்பு* (9:5, 6). தேவன், மாமிசத்தை அதின் இரத்தத்துடன் உண்ணக்கூடாது என்பதையும், மிருகங்களை உணவிற்காக கொல்லும் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் நோவாவிற்கு சொல்லிய பிறகு, மனித இரத்தம் சிந்துதல் என்ற மிக முக்கியமான தலைப்பிற்கு திரும்பினார்.

பயப்படக்கூடிய மற்றும் அல்லது எதிர்க்கின்ற விலங்குகள், ஒன்று மனிதர் மூலம் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும் அல்லது மனிதனை, அவைகளின் ஆகாரத்திற்கு மூலப்பொருளாக பார்த்திருக்க வேண்டும் என்பதிலிருந்து பாதுகாக்க தேவன் ஒரு அளவிலான பாதுகாவலை முன் வைத்துள்ளார். மனித இரத்தத்தை சிந்துவதற்கு, மனிதர்களும் மற்றும் விலங்குகளும் காரணம் என்பதை தேவன் வலி யுறுத்தியுள்ளார். மீறுபவர்கள், தங்களது சொந்த ஜீவனை அதாவது இரத்தத்தை சிந்தி பறி கொடுப்பார்கள் (உண்மையில், "உங்கள் உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்தை"; 9:5).

விலங்குகள், மனிதனைவிட உடல் ரீதியாக மேம் பட்டதாயிருப்பதால், அது மனித வாழ்க்கைக்கு ஒரு பெரிய அச்சுறுத்தும் வகையில் இருக்கும் பதத்தில், அதற்காக அவைகள் கண்மூடித்தனமாக கொல்லப்படக் கூடாது. ஒரு விலங்கானது மனித இனத்தை உணவாகக் கொள்ளுவதாய் இருந்தால், மக்களைக் காப்பாற்றுதற்காக, அது அழிக்கப்பட வேண்டும் என்று தேவன் சொன்னார். எல்லா உயிர்களும் புனிதமானது: ஆனால் மனித உயிரானது, குறிப்பாக தேவனுக்கென்று புனிதமாயிருப்பதாலும், மேலும், பகுத்தறிவு வாய்ந்த மனிதர்களுக்கு மாத்திரம் அல்ல மற்றும் அறிவுக்கு ஒவ்வாத விலங்குகள் மூர்க்கமாக மனிதர்களை தாக்குவதற்கும் எதிராக அதனுடைய உரிமைகள் நிரூபிக்கப் பட்டுள்ளன.

ஜலப்பிரளயத்திற்கு பின்பு, மனித இனத்தை காப்பதற்காக, முதலாவது தேவன் எல்லா விலங்குகளுக்குள்ளும், மனிதனைக் கண்டு பயப்படும் பயத்தை வைத்தார். பிறகு தேவனைக் குறித்து பயப்படும் பயத்தை வைத்தார். பிறகு, தேவனைக் குறித்து பயப்படும் பயத்தை மனிதருக்குள் வைத்து, அதன் மூலம் ஜலப்பிரளயத்திற்கு முன் செய்தது போல, ஒருவருக்கொருவர் தங்களை அழித்துக் கொள்ளாதவாறு செய்தார் (6:11-13). இப்போது, கொலை பாதகர்கள், தங்களை உருவாக்கியவருக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்பதை அறிந்து கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. தன்னுடன் உள்ள ஒரு மனிதனை எதிர்ப்பது என்பதன் அறிவானது, தேவனை எதிர்ப்பதற்கு சமமாகும். எல்லா உயிரும் தேவன் தந்த வரப்பிரசாதம் என்ற பார்வையில் பார்க்கப்பட வேண்டும். ஒரு மனித உயிரை அழிப்பது என்பது, தேவனுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டு, யாரை அவருடைய சாயலிலே படைத்தாரோ அந்த மனிதனை அழித்தல் என்பது ஆகும் (9:6). கர்த்தர் ஒருவரே வாழ்வைக் கொடுப்பவர் என்பதில் இருந்து, அவர் மாத்திரமே, அதை எடுத்துக் கொள்ளும் அதிகாரம் உள்ளவர் என்பது தெளிவு பட தெரிகிறது (யோபு 1:21).

நமக்குத் தெரிந்த வகையில், ஜலப்பிரளயத்திற்கு முன்பு, தேவன் எந்தவித தண்டனையையும் கொலைகாரர்களுக்கு அதிகாரத்துடன் கொடுக்கப்படவில்லை என்பதும், மற்றும் ஆரம்ப காலம் முதலே, இது

நடைமுறையில் இருந்து வந்ததும், குறிப்பாக உறவினர்களுக்குள் ஒருவருக்கொருவர் பலியாகி உள்ளார்கள் என்பதும் ஆகும். காயீன், ஆபேலைக் கொலை செய்ததற்கு பழி தீர்க்க, தன்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் தன்னைக் கொன்று போடுவானே என்றான் (4:14). அநேகமாக, ஜலப்பிரளயத்திற்கு முந்தின உலகத்தில், ஒழுங்கான அல்லது ஒரே மாதிரியான நீதி இருந்திருக்காது. லாமேக்கு, ஒரு வாலிபனைக் கொலை செய்ததை மறைப்பதற்கு கூட முயற்சி செய்யவில்லை. இருந்த போதிலும், அந்த கொலையைப் பற்றி அகந்தையுடன் தன் மனைவிகளிடம் கூறியுள்ளான் (4:23, 24). அவன் மனிதர்களின் கையினால் எந்த வகையான நியாயத்தீர்ப்போ அல்லது தண்டனையோ வரும் என சிறிதும் பயமில்லாமல் இருப்பதைப் போல காணப்படுகிறது.

அந்த காலக்கட்டத்தில், ஜலப்பிரளயத்திற்கு முன்பு கொலை மற்றும் மீறுதல் பரவலாக காணப்பட்ட போது, குற்றங்கள் புரியும் குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு எந்த ஒரு தனிநபரோ அல்லது அரசாங்க நிறுவனமோ இருந்ததற்கான சான்று இல்லை. தண்டனையை, சந்திப்பதற்குப்பதிலாக, அவர்கள் தங்களுக்கு தாங்களே கதாநாயகர்கள் என்ற ஒரு பெயர்[26] வாங்கும் வண்ணமாக அந்த சமுதாயத்தில் இருந்துள்ளார்கள் (6:4). தேவன் அவரது இறுதி அதிகாரத்தை, ஒருமுறை மற்றும் எல்லா காலங்களிலும் விளக்கும் வண்ணமாக, நோவாவையும் அவனது குடும்பத்தாரையும் தவிர பழைய உலகத்தை ஜலப்பிரளயத்தினால் அழித்ததன் மூலம், உலகளாவிய தண்டனையை மூலதனமாக ஏற்படுத்தியுள்ளார்.

“மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது” (9:6) என்று ஜலப்பிரளயத்திற்கு பின்பு, மனித வாழ்க்கையை பாதுகாக்கும் வண்ணமாக, கொலைகாரர்களை கையாள்வது பற்றி, நோவாவிடம் தேவன் அறிவுறுத்தல்களாக தெரிவித்தார். வேண்டுமென்றோ அல்லது மனிதாபிமானமற்ற முறையிலோ, தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட ஒருவனை கொலை செய்யும் போது, கொலை காரனுக்கான தண்டனை, அவனுடைய சொந்த ஜீவனையே எடுத்து விடுவது ஆகும். யாராவது ஒருவர் - சில நிறுவப்பட்ட நிறுவனத்திற்கு பிறகு - அதிகாரம் பெற்று, ஒரு கொலையாளியை தூக்கிலிட வேண்டும். இதுவே, மிகவும் நாகரீகம் முதிர்ச்சியற்ற உருவத்தில் உள்ள உள்நாட்டு அரசாங்கத்தின் ஆரம்பமாகும். இந்த வழியில் தேவன், ஒரு கொலையாளியை உச்ச அதிகாரத்தைப் பயன்படுத்தி தூக்கிலிடுவது என்பதை மனிதனுடன் பகிர்ந்து கொண்டுள்ளார். ரோமர் 13:1-7 வசனங்களில் கூறியுள்ளபடி, ஜனநாயக அரசாங்கமும் மற்றும் தண்டனையின் மூலக்கூறும் ஒன்று சேர்ந்து செல்ல வேண்டும் என்று பவுல் வலியுறுத்தியுள்ளார்.

துர்கிரியைகளை செய்பவர்களைத் தண்டிக்க, அரசாங்க அதிகாரிகள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது மற்றும் அவர்கள் “பட்டயத்தை விருதாவாய் பிடித்திருக்கவில்லை”[27] என்பதே ஆகும். ஜனநாயக அரசாங்கத்தில் அதனுடைய பலவீனங்கள் இருந்தாலும், சில நேரங்களில், அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக் கிறார்கள், மற்றும் குற்றம் புரியாத நிரபராதிகள் செய்யாத குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டுள்ளார்கள். அராஜகம் அல்லது அரசாங்கம் இல்லாமல் (சட்டமில்லா நிலை) மக்கள், அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்து வந்ததை விட ஒரு குறைபாடுள்ள அரசாங்கம் கூட சிறந்ததாக இருக்கும் (நியா. 17:6; 18:1: 19:1; 21:25).

*ஏற்பாடு 4: புவியில் வாழ்க்கையைப் பாதுகாக்க, ஒரு உடன்படிக்கை* (9:15-17). அதாவது ஜலப் பிரளயத்திற்கு பின்பு, தேவன் மனிதனுடன் பண்ணின உடன்படிக்கையானது, அடிக்கடி “நோவாவின் உடன்படிக்கை” என்று கூறப்பட்ட போதிலும், அது நோவாவுடனும் அவனது குடும்பத்தினருடனும் செய்த சாதாரணதொரு உடன்படிக்கையாக இருக்கவில்லை. அது, அவர்களுடைய எல்லா வம்சாவளிகளுடனும் (9:9), மற்றும் எதிர்காலத்தில் “உங்களுக்கு பின்வரும் உங்கள் சந்ததியோடும்” (9:12) ஏற்பட்டதாயிருந்தது. உடன்படிக்கையானது அங்கேயே நின்று விடாமல், “சகல ஜீவ ஜந்துக்கள் முதல் இனிப் பூமியில் உண்டாகப் போகிற சகல ஜீவ ஜந்துக்கள் பரியந்தம், பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற பூமியில் உள்ள சகல காட்டு மிருகங்களோடும்” என்பதை உள்ளடக்கி உள்ளது (9:10, 12, 15). தேவனுடைய வாக்குறுதியினால், மனித குலம், பறவைகள், மிருகங்கள் மற்றும் எல்லா ஊரும் ஊர்வனவைகளும் பயனடைந்துள்ளனர். தேவன் இன்னும் ஒரு ஜலப்பிரளயத்தினால், பூமியில் வாழும் எல்லாவற்றையும் அழிப்பதில்லை என்று நிபந்தனையற்ற வாக்குறுதியை, முடிவு பரியந்தம் அதை விரிவுபடுத்தி ஜலப்பிரளயத்திற்கு பின்பு உள்ளவர்களுடன் செய்து கொண்டார். தொடுவானத்தில் மேகங்கள் தோன்றி, அச்சுறுத்தும் புயல் என்பவைகளில் எல்லா நேரத்திலும் நம்பிக்கை இழந்து நிற்கும் மனித இனத்தைப் பாதுகாப்பதற்கே ஆகும்.

பொதுவாக, பண்டைய உலகத்தில், உடன்படிக்கை செய்யும் பொழுது, ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகள் இரு கட்சிகளின் மீதும் வற்புறுத்தப்பட்டுள்ளன. இருந்த போதிலும், தேவன், இந்த உடன்படிக்கை நீடித்திருக்கும் நிலையில் தன்னை மட்டுமே இணைத்தும் மனித இனத்தின் மீது எந்த ஒரு நிபந்தனைகளையும் வற்புறுத்தாமல் ஏற்படுத்தியுள்ளார். ஒரு உத்திரவாதமாக, தேவன், மனித இனம் பார்ப்பதற்கு “ஒரு அடையாளமாக” வானவில்லை ஏற்படுத்தினார் என்பது, அவர் மனுமக்களுடன் பண்ணிக்கொண்ட

“நித்திய உடன்படிக்கை” யாகும் (9:16). இது தேவன் தம்முடைய வாக்குறுதியில் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்பது சாட்சியாக அமைந்துள்ளது (9:12-17). பாவங்கள் நிறைந்த ஒரு உலகத்திற்கு அவருடைய நியாயத்தீர்ப்பைத் தொடர்ந்து வருங்கால சந்ததியாருக்கு, தேவன் மீண்டும் ஜலப்பிரளயத்தினால் உலகம் முழுவதிலுள்ள ஜீவராசிகளை அழிக்கமாட்டார் என்ற நம்பிக்கையின் அடையாளமாக மேகத்தில் வில்லை ஏற்படுத்தியது, தேவனுடைய கிருபையைக் குறிப்பதாகும்.

எல்லோரும் பாவம் செய்த பொழுதிலும் (ரோமர் 3:23), பரலோகப் பிதா தனது சிருஷ்டிப்பை ஆசீர்வதிக்கவும், மற்றும் நல்ல ஈவுகளை நமக்கு வழங்குவதிலும், இன்னும் தமது பாசக் கயிற்றினால் பிடித்துக் கொண்டிருக்கிறார் (காண்க மத். 5:45; 7:11). நம்மில் அன்புகூரும், நம்மை பராமரிக்கும், நம்மை காப்பாற்றும் மற்றும் நம் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் அவருக்கு நாம் செய்ய வேண்டிய, ஒரே ஒரு தக்க பதில் என்னவென்றால், நாம் அவரில் அன்புகூருவதும், மற்றும் அவருக்குக் கீழ்ப்படிவதுமேயாகும்.

## வானவில் மூலம் திரும்ப உறுதி செய்தல் (9:12-17)

தேவனுடைய பிள்ளைகள், அதிக வேதனையுடனும், மற்றும் சிலர் தங்களது விசுவாசத்தை விட்டு விலகி அதன் விளிம்பில் இருக்கும் பொழுதும், யெகோவா, வானவில் என்ற அடையாளத்தை இருமுறை பயன்படுத்தியது தெரியவந்துள்ளது. அவரது சிம்மாசனமும் மற்றும் சரித்திரமும் கட்டுப்பாட்டில் இருந்த போதிலும், துன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கும் அவரது ஜனங்கள், அவரே பூமியிலும், பரலோகத்திலும் ஆட்சி செய்கிற பரமபிதா என்பதை அறிந்து கொள்ள விருப்பம் உள்ளவராயிருக்கிறார்.

*தேவனின் மகிமை: எசேக்கியேல் புத்தகத்தில் உள்ள வானவில்.* ஏறத்தாழ கி.மு. 598 இல், எசேக்கியேல், யோயாக்கீன் ராஜா, அவனது குடும்பத்தினர் மற்றும் எருசலேமில் குடியிருந்த பத்தாயிரம் ஜனங்கள் பாபிலோனுக்கு, சிறைபிடித்துக் கொண்டு சென்றபொழுது (2 இராஜா. 24:8-17), பாபிலோனிய சிறையிருப்பின் இரண்டாவது கட்டத்தில், முதல் உதாரணமாக, வானவில் அடையாளமாக தோன்றியுள்ளது. ஐந்து வருடங் களுக்குப் பிறகு (ஏறத்தாழ கி.மு. 593), தேவன் தீர்க்கதரிசன ஊழியததிற்கு, எசேக்கியேலை அழைத்துள்ளார். யூதேயாவில் உள்ள ஜனங்கள் தங்களது உருவ வழிபாடு மற்றும் பொல்லாத வழிகளிலிருந்து மனந்திரும்பாவிட்டால், எருசலேம் நகரமும் மற்றும் ஆலயமும்அழிக்கப்பட்டுவிடும் என்று எசேக்கியேல் அவருடன் சிறையிருப்பில் இருந்த கேபார் நதிக்கரையில் உள்ள ஜனங்களை எச்சரிப்பதற்காக, ஏற்பாடு செய்துள்ளார். சிறையிருப்பின் மக்களின் மத்தியில் இருக்கும் போது, தான் கண்ட முதல் தேவ தரிசனத்தைப் பற்றி

கூறுகிறார்:

> இப்போது வானங்கள் திறக்கப்பட நான் தேவ தரிசனங்களைக் கண்டேன் … இதோ, வடக்கேயிருந்து புசல்காற்றும், பெரிய மேகமும், அத்தோடே கலந்த அக்கினியும் வரக் கண்டேன். அதைச் சுற்றிலும் பிரகாசமும், அதின் நடுவில் அக்கினிக்குள்ளிருந்து விளங்கிய சொகுசாவின் நிறமும் உண்டாயிருந்தது. அதின் நடுவிலிருந்து நாலு ஜீவன்கள் தோன்றின. அவைகளின் சாயல் மனுஷசாயலாயிருந்தது. நான் அந்த ஜீவன்களைப் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ பூமியில் ஜீவன்களண்டையிலே, நாலு முகங்களையுடைய ஒரு சக்கரத்தைக் கண்டேன். ஜீவனுடைய தலைகளின் மேல், பிரமிக்கத்தக்க, வச்சிரப் பிரகாசமான ஒரு மண்டலம் இருந்தது. அது அவைகளுடைய தலைகளின் மேல் உயர விரிந்திருந்தது. மண்டலத்தின் கீழ், அவைகளுடைய செட்டைகள் ஒன்றுக் கொன்று எதிர் நேராய் விரிந்திருந்தன. தங்கள் தங்கள் உடல்களை மூடிக்கொள்ளுகிற இரண்டிரண்டு செட்டைகள், இருபக்கத்திலும் இருக்கிற ஒவ்வொன்றுக்கும் இருந்தன. அவைகள் செல்லும்போது, அவைகளுடைய இரைச்சலைக் கேட்டேன்; அது பெருவெள்ளத்தின் இரைச்சல் போலவும்; சர்வ வல்லவருடைய சத்தம் போலவும் ஒரு இராணுவத்தின் இரைச்சலுக்கு ஒத்த ஆரவாரத்தின் சத்தம் போலவும் இருந்தது; அவைகள் நிற்கும் போது, தங்கள் செட்டைகளைத் தளர விட்டிருந்தன. அவைகள் நின்று தங்கள் செட்டைகளைதத் தளரவிட்டிருக்கையில், அவைகளுடைய தலைகளுக்கு மேலான மண்டலத்தின் மேலிருந்து ஒரு சத்தம் பிறந்தது. அவைகளின் தலைகளுக்கு மேலுள்ள மண்டலத்தின் மீதில், நீலரத்தினம் போல விளங்கும், ஒரு சிங்காசனத்தின் மேல், மனுஷ சாயலுக்கொத்த ஒரு சாயலும் இருந்தது. அவருடைய இடுப்பாக காணப்பட்டது முதல் மேல் எல்லாம் உட்புறம் சுற்றிலும் அக்கினி மயமான சொகுசாவின் நிறமாயிருக்கக் கண்டேன்; அவருடைய இடுப்பாகக் காணப்பட்டது முதல், கீழெல்லாம் அக்கினி மயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கக் கண்டேன். *மழை பெய்யும் நாளில், மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே சுற்றிலுமுள்ள அந்தப் பிரகாசம் காணப்பட்டது.* இதுவே கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது; அதை நான் கண்டபோது முகங்குப்புற விழுந்தேன்; அப்பொழுது பேசுகிற ஒருவருடைய சத்தத்தைக் கேட்டேன் (எசே. 1:1-28; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

எருசலேமில் எஞ்சியிருந்த இஸ்ரவேலர், ஆவிக்குரிய வாழ்வில் பின் தங்கியிருந்தார்கள் இருந்த போதிலும், அவர்கள் ஆலயத்தை விக்கிரகங்களாலும் மற்றும் அந்நிய தேவர்களின் கோவில் களினாலும் நிரப்பியிருந்தாலும், இது இன்னும் யெகோவா குடியிருக்கும் வாசஸ்தலமாயுள்ளது என்ற நம்பிக்கையுடன் இருந்துள்ளார்கள். தேவன் அவர்களது ஆலயத்தையோ அல்லது யூதர்களது நாட்டையோ அழித்துவிட ஒப்புக் கொடுத்துவிடுவார் என்பதை அவர்கள் நம்பவில்லை.

அதனையும் சேர்த்து, கி.மு. 605 மற்றும் 598இல், பாபிலோனுக்கு சிறையாகக் கொண்டு செல்லப்பட்ட இஸ்ரவேலரைப் பார்த்து, எருசலேமின் குடிகள் சுயமாக ஏளனம் செய்துள்ளார்கள். மனு புத்திரனே, நீங்கள் கர்த்தரை விட்டு தூரமாய் போங்கள். எங்களுக்கு இந்த தேசம் சுதந்தரமாகக் கொடுக்கப் பட்டதென்று, உன் சகோதரருக்கும், உன் குடும்பத்தாருக்கும், உன் பந்து ஜனங்களுக்கும், இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும், எருசலேமின் குடிகள் சொல்லுகிறார்கள் (எசே. 11:15).

எசேக்கியேல் புத்தகத்தின் முகவுரையின் பார்வையில், அவர்கள் முறைப்படி தவறாகதான் உள்ளார்கள் என்று தெரியவந்துள்ளது. சிறையிருப்பில் உள்ள அவருடைய ஜனங்களுக்கு, தேவன் தொடர்ச்சியாக தீர்க்கதரிசன வார்த்தைகள் மூலம் அவர்களை ஆறுதல் படுத்த வழி செய்திருக்கும் போது, கேரூபீன்களின் நடுவே அவருடைய ஆலயத்தில் பேழையின் மேல் வீற்றிருக்கவில்லை (காண்க 2 சாமு. 6:2). இந்த மேன்மையாக சுட்டிக் காட்டப்பட்டுள்ள பாகத்தில், யெகோவா, அண்ட லோகங்களுக்கும் இராஜாதி இராஜா, பரலோகத்தில் முடிசூட்டப்பட்டு, சக்கரங்கள் உடைய ஒரு ரதத்தில், அதுவும் உயிருள்ள ஜீவன்களால், பின்பு அவைகள் கேருபீன்கள் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளவைகளால், செலுத்தப்படுமாறு காண்பிக்கப்பட்டுள்ளது (எசே. 1:15-26; 10:15, 20). மேலும், இஸ்ரவேல் புத்திரரின் மிகவும் எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் மற்றும் பொல்லாப்புக்கள் நிமித்தம் “யெகோவாவின் மகிமை” (அவருடைய சந்நிதானம்) எருசலேம் மற்றும் ஆலயத்திலிருந்து அவர்களை விட்டு எடுபட்டுப் போவதையும், மிகவும் தெளிவாக, தீர்க்கதரிசிக்கு தரிசனங்கள் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது (எசே. 8:3-6; 9:3-7; 10:1-5, 15-20; 11:22-25).

நகரத்திலிருந்தும் மற்றும் எருசலேமுக்கு கிழக்கே ஒரு மைல் தொலைவில் உள்ள ஒலிவ மலையின் சிகரத்திற்கு மேலாகவும், “யெகோவாவின் மகிமை,” கடைசியாக எடுபட்டுப் போகும் பொழுது, கர்த்தர் கேபார் நதியண்டையில், சிறையிருப்பின் போது தெரிவித்துள்ளது என்னவென்றால், நான் அவர்களைத் தூரமாய் புறஜாதிகளுக்குள்ளே துரத்தியிருந்தாலும், நான் அவர்கள் போன தேசங்களில் அவர்களுக்குக் கொஞ்ச காலத்துக்கு “பரிசுத்த ஸ்தலமாக” (מִקְדָּשׁ, *miqdash*, மிக்டஸ் “ஆலயம்”) (எசே. 11:16) இருப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல். மற்றொரு வகையில், பாபிலோனின் சிறையிருப்பில் இருந்த தேவனுடைய ஜனங்கள் கர்த்தரை விட்டு தூரம் போகவில்லை என்ற போதிலும், கர்த்தர் கைவிட்டார் மற்றும் கைவிடப்பட்டனர் என்று எருசலேமில் உள்ள கர்வமுள்ள யூதர்கள் அனுமானம் செய்து கொண்டார்கள். மாறாக, “கர்த்தரின் மகிமை” எருசலேமை விட்டு நீங்கிப் போயிற்று.

கர்த்தருடைய ஜனங்கள் மனந்திரும்பவும், அவர்களது இருதயத்தை கர்த்தருக்கு நேராக திருப்பி, அவரிடமே திரும்பி வரவும், கர்த்தர் ஏக்கம் கொண்டவராயிருக்கிறார். கர்த்தர், இன்னும் அவர்களை ஆசீர்வதிக்கவும் மற்றும் மன்னிக்கவும் சித்த முள்ளவராயிருக்கிறார் என்றும், ஒரு நாளில் அவர்களது சொந்த பூமிக்கு திரும்பிச் செல்ல அனுக்கிரகம் செய்வார் என்றும் அவர்கள் அறிந்து கொள்ளுவது, அவசியமாயுள்ளது (எசே. 11:17-20). கர்த்தர், அவர்களில் அநேகம் பேர் அதைரியத்துடன் உள்ளார்கள் என்பதை புரிந்தவராயும் மற்றும் அவர்களது எதிர்காலத்துக்கு புது நம்பிக்கை கொடுக்க விருப்பம் உடையவராயும் இருந்தார். வருங்காரியங்களுக்கு முன்னோடியாக, எசேக்கியேலினுடைய முதல் தரிசனம் இருப்பதால், அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஓடும் சிம்மாசனத்துடன் கூடிய ரதத்தின் தோற்றம், “கர்த்தரின் மகிமை” மற்றும் மின்னலின் வெட்டொளி பிரகாசம் (எசே. 1:4, 13, 14) இவையெல்லாம் தேவனின் நியாயத்தீர்ப்புக்கான ஒரு செய்தியாக விளக்கம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்: இது நிச்சயமாக மனதில்லாத இஸ்ரவேலருக்கு நம்பிக்கையின்மையை உண்டாக்கியிருக்கலாம். இருந்த போதிலும், கர்த்தரின் தரிசனம் முடியும் தருவாயில், தீர்க்கதரிசி அவரைச் சுற்றிலும் அற்புதமான பிரகாசத்தைக் கண்டார் (எசே. 1:27). இது ஒரு ஆச்சரியத்திற்குரிய அற்புதமான காட்சியாக இருந்திருக்கும் என்பதால், எசேக்கியேல் மறுபடியும் அதைப் பார்த்து, மழை பொழியும் நாளில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே சுற்றிலுமுள்ள அந்தப் பிரகாசம் காணப்பட்டது என்று கூறுகிறார் (எசே. 1:28). அவரது ஜனங்களின் பாவங்களினிமித்தம் யெகோவாவின் கோபமாக, அவரைச் சுற்றிலும் அக்கினி மயமாக என்பது அடையாளம் காட்டப்படுவதுடன்: நியாயத்தீர்ப்பின் நடுவே, அவரது இரக்கம் மற்றும் கிருபையைக் குறிப்பிடும் வண்ணமாக, மழை பெய்யும் நாளில், மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே அதைச் சுற்றிலுமுள்ள பிரகாசம் காணப்பட்டுள்ளது. ஜலப்பிரளயத்துக்குப் பின், நோவாவிற்கும் அவனது குடும்பத்துக்கும் வானவில்லைக் கொடுத்தது போன்று, சிறையிருப்பின் மக்களுக்கு கர்த்தருடைய இந்த அழகான செய்தி நம்பிக்கையைக் கொடுத்தது.

*தேவனின் சிம்மாசனத்தின் மகிமை: வெளிப்படுத்தின விசேஷத்தில் வானவில்.* விவிலிய சரித்திரத்தில் அடுத்த முறை, கிறிஸ்தவர்கள் ரோம சாம்ராஜ்யத்தால் கோரமான துன்புறுத்துதலுக்கு உள்ளான, அதாவது எசேக்கியேல் காலத்திற்கு பின், பல நூற்றாண்டுகள் கழித்து, வானவில் ஒரு அடையாளமாகத் தோன்றியது. “மகா பாபிலோன், வேசிகளுக்கும், பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய்” என ரோமசாம்ராஜ்யம் மாறியது. “தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும்

பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் குடித்து" (வெளி. 17:5, 6), ஒரு வேசியைப் போல தலைநகரம் மாறியுள்ளது. கி.பி. முதலாம் நூற்றாண்டு முடியும் சமயமானது, தேவனுடைய பிள்ளைகளுக்கு மிகவும் நெருக்கமான ஒரு காலமாக இருந்தது. சபைகளை அழிப்பதில் சாத்தானும் அவனது கருவிகளும்[28] ஜெயங்கொண்டது போல் காணப்பட்டுள்ளது. ரோமரது பொருளாதார அரசியல் மற்றும் இராணுவ பலத்திற்கு எதிராக, கிறிஸ்தவர்கள் உதவியற்றவர்களாக காணப்பட்டார்கள்.

இந்த குழப்பம் உண்டாயிருந்த காலங்களின் நடுவில், அப்போஸ்தலனாகிய யோவான், ரோம சாம்ராஜ்யத்தில் (நவீன மேற்கு துருக்கி) உள்ள ஏழு சபைகளுக்கும் கடிதங்கள் எழுதுமாறு அறிவுறுத்தப்படுகிறார்; கர்த்தர் தரிசனமாக, அவருக்கு காண்பித்தவைகளை வெளிப்படுத்துகிறார் (வெளி. 1:11). இந்த தரிசனங்களின் பதிவு, வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகத்தில், இயேசு கிறிஸ்துவே நம்மில் அன்பு கூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களிலிருந்து நம்மைக் கழுவுகிறவராக சித்தரிக்கப்படுவதுடன் துவங்குகிறது (வெளி. 1:5).

இயேசு, தெய்வீக மனுஷகுமாரன் என வெளிப்படுத்தின விசேஷத்தில், 1:13-18ல் ஒரு விளக்கம் கொடுக்கப்பட்டதுடன் இணைந்து எசேக்கியேல் 1ம் அதிகாரம் மற்றும் தானியேல் 7ம் அதிகாரஙகளில் உயர்வான அடையாள மொழியாக, தேவனை ஒரு உருவமாக காண்பித்துள்ளார்கள். இதில் இயேசு ஒருவரே "மரித்தார்," ஆனால், பாருங்கள் அவர் "என்றென்றும் சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறார்." மரித்தேன், ஆனாலும் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் "மரணத்திற்கும், பாதாளத்திற்குரிய திறவுகோல்களை" உடைய வராயிருக்கிறேன் என்ற வெளிப்படையான தரிசனம், உயிர்த்தெழுந்த கர்த்தரைத் தேவனாக, உலகத்துக்கே நித்திய நியாயாதிபதியாக மிகவும் பயப்படத்தக்கதாகவும், அற்புதமான காட்சியாவும் சித்தரிக்கப்பட்டுள்ளது (வெளி. 1:18).

சபைகளுக்கு அனுப்பியுள்ள நிருபங்கள், பாராட்டு மற்றும் எச்சரிக்கைகள், ஆசீர்வாதங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் எல்லாம் கலந்தவைகளாக இருந்துள்ளன. "மரணபரியந்தம் உண்மை யாயிருத்தல்" என்பது யாரெல்லாம் நம்பிக்கையில் நிலைத் திருக்கிறார்களோ, அவர்களையே சாரும்: அவர்கள் "ஜீவகிரீடத்தை" பெறுவார்கள் (வெளி. 2:10). "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்தது போல," ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ, அவனும் என்னுடைய சிங்காசனத்தில், என்னோடேகூட "உட்காரும்படிக்கு" அருள் செய்வேன் (வெளி. 3:21). இருந்தபோதிலும், தவறான மதக்கொள்கைகள், விக்கிரக

ஆராதனை அல்லது வேசித்தனம் ஆகியவைகளின் பக்கம் சென்றவர்களைப் பார்த்து, நீ "மனந்திரும்பு" இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, "என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன்" (வெளி. 2:16) என்று ஆவியானவர் அறைகூவல் விடுகிறார்.

ஏற்கெனவே, ஆறுதலான அரவணைக்கும் வார்த்தைகளை, கர்த்தர் அவருடைய ஜனங்களிடம் கூறியிருந்த போதிலும் (காண்க வெளி. 1:5, 6), துன்புறுத்தப்பட்ட மற்றும் ஊக்கமில்லாத கிறிஸ்தவர்கள், அவர்களது நம்பிக்கையைப் பெறுவதற்கு இன்று அதிகம் தேவையானதாக இருந்துள்ளது. தேவனுடைய ஜனங்கள் அதிகம் நெருக்கப்பட்டார்கள். வெளிப் புறமாக பார்க்கும் பொழுது, பொல்லாங்கனின் பேரரசன், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாகிய இரட்சகரை, உண்மை தேவனை, மேற்கொண்டவாறு அறிகுறிகள் காணப்பட்டாலும் - தேவன் தான் இன்னும் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறேன் என்பதையும் மற்றும் உலகத்தினுடைய மொத்த அதிகாரத்தையும் தனது கையில் உள்ளடக்கியுள்ளேன் என்பதையும் கிறிஸ்தவர்கள் அறிந்துகொள்ள விருப்பம் உள்ளவராய் இருந்துள்ளார்.

ரோம சாம்ராஜ்யத்திற்கு, நியாயத்தீர்ப்பு காத்துக் கொண்டிருந்தது. கடைசி காலத்தின் முடிவிலே, மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும், அதின் சொருபத்தை வணங்கினவர்களும், பெரிய வெள்ளை சிங்காசனத்தின் முன், நியாயத்தீர்ப்புக்காக நிற்க வேண்டும் என்பதும், மற்றும் நித்திய வாழ்விற்கு எதிராக, அக்கினிக்கடலிலே தள்ளப்படுவார்கள் என்று தீர்க்கப்படுவார்கள் (வெளி. 19:19, 20; 20:11-15). இந்த நியாயத்தீர்ப்புகள் பற்றி கலந்துரையாடல் பண்ணுவதற்கு முன்பு, எப்படியாயினும் தேவன் மற்றொரு அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளார். அவர்களுடைய பெரும் துன்பங்களுக்கு மத்தியில், இந்த கிறிஸ்தவர்களும் யோவானுடன் சேர்ந்து, பார்த்திராததை பார்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளார்கள். வயது முதிர்ந்த அப்போஸ்தலனாகிய யோவான், தரிசனத்தில் பரலோகத்தில் உள்ள ஜெயங்கொள்ளுகிற உருவங்களை தெளிவாகப் பார்க்க முடிந்தது; பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர், அவனுடைய சாட்சியை ஒவ்வொரு சபைகளும் அறிந்து கொள்ளுமாறும், அவன் எழுதுவதை, அவர்கள் படித்து அறிந்து கொள்ளுமாறும், தெளிவுபட காண்பித்துள்ளார்.

ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு நிருபங்களை எழுதி தெரிவித்த பின்பு (வெளி. 2:1-3:22), யோவான் வானத்தில ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்ததையும், அதில் தேவனாகிய கர்த்தர் அமர்ந்திருப்பதையும் பார்ப்பதற்கு தரிசனத்தில் ஏற்பாடு செய்திருந்ததையும் (வெளி. 4:2-8)லும், ஏசாயாவும் (ஏசாயா 6:1-3) லும், எசேக்கியேலும் (எசே. 1:26-28)லும் மற்றும் தானியேலும் (தானி. 7:9,

10)லும் குறிப்பிட்ட மொழியில், அவரை விளக்கியுள்ளார்கள். அவர் அந்த சிங்காசனத்தின் மேல் ஆட்டுக்குட்டியானவர் (இயேசு) வீற்றிருப்பதைப் பார்த்ததுடன், பரலோகத்தில் உள்ள விருந்தளிப்பவாகள், பரமபிதாவாகிய தேவனுக்கும் மற்றும் தேவ குமாரனுக்கும், ஸ்தோத்திரமும், கனமும், மகிமையையும் செலுத்தி, போற்றியும் வழிபட்டுக் கொண்டிருந்தார்கள் (வெளி. 4:9-11; 5:9-14). எசேக்கியேல் 1ம் அதிகாரத்தில், சூழ்நிலைகள் எப்படி இருக்க வேண்டும் என்று தோன்றியபடி, இருக்கவில்லை. நேபுகாத்நேச்சார் அல்லது சீஸர் போன்ற லௌகீக இராஜாக்களைப்போல், உலகில் காணப்படுகிற சிம்மாசனத்தின் மேல் வீற்றிருப்பதைப்போல் அல்லாமல், உண்மையான இராஜாவும் மற்றும் பரலோகத்தையும், பூமியையும் ஆளுபவருமாகிய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர் வீற்றிருக்கவில்லை. பரலோகத்தில் ஒருவரே ஆளுபவராயிருக்கிற தேவனும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்கள் யோவான் எழுதியுள்ளார்.

> இவைகளுக்குப் பின்பு, இதோ பரலோகத்தில் திறக்கப் பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காள சத்தம் போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது: இங்கே ஏறிவா, இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது. உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது, இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார். வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; *அந்த சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில் இருந்தது;* அது பார்வைக்கு மரகதம் போல் தோன்றிற்று. அந்தச் சிங்காசனத்தைச சூழ இருபத்து நான்கு சிங்காசனங்களிருந்தன; இருபத்து நான்கு மூப்பர்கள் வெண் வஸ்திரம் தரித்து, தங்கள் சிரசுகளில் பொன் முடிசூடி, அந்த சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருக்கக் கண்டேன். அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன; தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாகப் எரிந்து கொண்டிருந்தன, அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாக பளிங்குக்கொப்பான கண்ணாடிக் கடலிருந்தது; அந்த சிங்காசனத்தின் மத்தியிலும் அந்தச் சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன, அவைகள் முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன. முதலாம் ஜீவன் சிங்கத்திற்கு ஒப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக் கொப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷ முகம் போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவும் இருந்தன. அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்று அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும், சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன. அவைகள் இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன. மேலும், சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து,

சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு அந்த ஜீவன்கள், மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தும் போது, இருபத்து நான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத்தொழுது கொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து: கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயி ருக்கிறது என்றார்கள் (வெளி. 4:1-11; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

யோவானுடைய ஊக்குவிக்கிற தரிசனத்திலே “அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வான வில்லிருந்தது” (வெளி. 4:3) என்பது ஒரு முக்கிய நிகழ்வு ஆகும். இந்த அடையாளம் வலிமை வாய்ந்ததாகும். நோவாவும் மற்றும் அவனது குடும்பமும் பேழையிலிருந்து வெளியே வந்து ஜலப்பிரளயத்தினால் பேரழிவுக்குள்ளான உலகத்தை பார்த்த போது, உடன்படிக்கையின் வானவில்லானது, புதிய ஆரம்பத்திற்கு அவர்களுக்கு ஒரு நம்பிக்கையையும் மற்றும் அதைத் தொடர்ந்துள்ள வாழ்க்கைக்கு பூமியின் மேல் உள்ள தேவனுடைய ஆசீர்வாதங்களையும் வெளிப்படுத்தும் ஒன்றாய் அமைந்திருந்தது. அதைப்போலவே, யூதர்கள் பாபிலோனிய சிறையிருப்பில் இருக்கும் போது, எருசலேமில் உள்ள எஞ்சியுள்ள இஸ்ரவேலர் மனந் திரும்பாவிட்டால், அவர்கள் மீது பூரணமான பேரழிவு வரும் என்பதும், மழை பெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே கர்த்தருடைய சிங்காசனத்தைச் சுற்றிலும் அந்தப் பிரகாசம் காணப்பட்டது, அவர்களது சிறையிருப்பிற்குப் பின் உள்ள புதிய ஆரம்பத்திற்கு நம்பிக்கையின் அடையாளமாக உள்ளது, அது, தேவன் தம்முடைய ஜனங்களை வாக்குத்தத்த பூமிக்கு மீண்டும் திருப்பிக் கொண்டு வருவார் என்றும் மற்றும் அவர்களை இதற்கு முன் ஆசீர்வதித்ததைப் போல ஆசீர்வதிப்பார் என்பதற்கான உறுதிப்பாட்டை மீண்டும் அவர்களுக்கு கொடுத்துள்ளது.

முதலாம் நூற்றாண்டு முடியும் தருவாயில், சீசர் தன்னை “கர்த்தர், தேவன் மற்றும் மீட்பர்” என்று சொல்லியபோது, யோவானின் தரிசனம், அந்தப் பொய்யானது செருக்குடன் சொல்லப்பட்டது என்றும், மற்றும் உண்மையான “கர்த்தர், தேவன் மற்றும் மீட்பர்” என்பவர், பரலோக சிங்காசனத்தில் வீற்றிருப்பவர் என்பதை ஒரு நினைவுகூருதலாக கருதப்பட்டுள்ளது. யோவான் பரலோகத்தை நோக்கினபோது சிங்காசனத்தைச் சுற்றிலுமுள்ள ஒரு வானவில்லைக் கண்டான், அது நியாயத்தீர்ப்பின் நடுவிலும், கர்த்தருடைய ஜனங்களுக்கு, அவரது கிருபையின் உருவமாக இருந்தது. இவ்வுலகவாழ்க்கைக்கு மாத்திரம் அல்ல, அதன் பிறகு உள்ள புதிய வானமும் மற்றும் புதிய பூமியும், இது

அவர்களுக்கு எதிர்கால நம்பிக்கையைத் தருவதாய் உள்ளது. அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இரட்சிக்கப்பட்ட வர்களுக்கு இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலு மில்லை, வருத்தமுமில்லை: முந்தினவைகள் ஒழிந்து போயின, எல்லாவற்றையும் அவர் புதிதாக மாற்றுவார் (வெளி. 21:1-5). ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான், மேலும் அது நித்தியத்திற்கு செல்லும் இறுதி நிறைவேறுதலாய் இருக்கும் (2 கொரி. 5:17), மற்றும் எல்லா காலங்களிலும் மீட்கப்பட்டவர்கள் ஒன்றுகூடி வானவில் சூழ்ந்திருநத சிங்காசனத்திற்கு முன்பாக தேவனையும் மற்றும் ஆட்டுக்குட்டியானவரையும் (இயேசு) சதா காலமும் ஸ்தோத் தரித்துக் கொண்டிருப்பார்கள்.

## **“நித்திய உடன்படிக்கை” (9:16)**

எபிரெய (בְּרִית עוֹלָם, *b*$^{e}$*rith ‘olam*), “பிரித் ஓலம்” என்பது, “நித்திய உடன்படிக்கை” அல்லது “முடிவற்ற உடன்படிக்கை” என்று மொழி பெயர்க்கப்பட்டு, பழைய ஏற்பாட்டில் பதினாறு இடங்களில் வந்துள்ளது. இச்சொற்றொடரின் பயன்பாடு குறித்து நாம் ஆய்வு செய்து, அதன் பிறகு *‘olam* என்பதற்கான பலவித அர்த்தங்களை கருத்தில் கொள்வோம்.

பொதுவாக உடன்படிக்கைகள், இரண்டு கட்சிகளை கட்டுப் படுத்துவதாய் அமைந்திருந்தாலும், தேவன் சில நேரங்களில், அவருடைய வாக்குறுதியை நிறைவேற்ற கடமைப்பட்டவராய், அவரை மட்டுமே கட்டுப்படுத்தும் வகையில் ஒரு உடன் படிக்கையை ஏற்படுத்துவார். உதாரணமாக, பூமியை மீண்டும் ஜலப்பிரளயத்தினால் அழிக்கமாட்டேன் என்ற ஒரே ஒரு நிபந்தனையுடன், தேவன் நோவாவுடன் ஒரு உடன்படிக்கை பண்ணியுள்ளார்.

> … இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லையென்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும், உங்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார். அன்றியும் தேவன்: எனக்கும் உங்களுக்கும், உங்களிடத்திலிருக்கும் சகல ஜீவஜந்துக்களுக்கும், நித்திய தலைமுறைகளுக்கென்று நான் செய்கிற உடன்படிக்கையின் அடையாளமாக: நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன், அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். நான் பூமிக்கு மேலாய் மேகத்தை வருவிக்கும்போது, அந்த வில் மேகத்தில் தோன்றும். அப்பொழுது எல்லா மாம்ச ஜீவஜந்துக்களுக்கும் உண்டான என் உடன்படிக்கையை நினைவுகூருவேன். அந்த வில் மேகத்தில் தோன்றும் போது, தேவனுக்கும் பூமியின் மேலுள்ள சகலவித மாம்ச ஜீவன்களுக்கும் உண்டான *நித்திய உடன்படிக்கையை* நான் நினைவுகூரும்படிக்கு அதை நோக்கிப் பார்ப்பேன் (9:11-16; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

பல தலைமுறைகளுக்குப் பிறகு, தேவன் ஆபிரகாமுடன் ஒரு உடன்படிக்கை பண்ணினார். இது தேவனுடைய ஜனங்களான ஆபிரகாமுடைய குடும்பத்தினருடன், விருத்தசேதன சடங்கு என்ற உடல் சம்பந்தமான அடையாளக்குறியின் மூலம், அவர்களை மட்டும் கட்டுப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

> உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும்; உனக்கும், உனக்குப் பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை *நித்திய உடன்படிக்கையாக* ஸ்தாபிப்பேன் என்றார் … உன் வீட்டிலே பிறந்த பிள்ளையும் … உன் பணத்திற்கு கொள்ளப்பட்டவனும், விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் இப்படி என் உடன்படிக்கை உங்கள் மாம்சத்திலே *நித்திய உடன்படிக்கையாக* இருக்கக்கடவது (17:7-13; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

தேவனுடைய உடன்படிக்கையானது, ஆபிரகாமின் வம்சா வளியான வாக்குத்தத்தத்தின் மகன் வரை நீடித்திருக்க வேண்டும்:

> அப்பொழுது தேவன், உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக; என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் *நித்திய உடன்படிக்கையாக* ஸ்தாபிப்பேன் என்றார் (17:19; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

அவர் ஈசாக்குக்கு இட்ட “ஆணையையும்” என்றென்றைக்கும் நினைத்திருங்கள். அதை யாக்கோபுக்குப் பிரமாணமாகவும், இஸ்ரவேலுக்கு “நித்திய உடன்படிக்கையாகவும்” உறுதிப்படுத்தி: உங்கள் சுதந்தர பாகமாக கானான் தேசத்தை உனக்குத் தருவேன் என்றார் (1 நாளா. 16:16-18; சங். 105:9-11).

ஆபிரகாமினுடைய குடும்பமானது, இஸ்ரவேல் மக்களைக் கொண்ட ஒரு தேசமாக விரிவடைந்தது. கர்த்தர் எகிப்தின் அடிமைத்தனத்தின்று விடுவித்து இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திச் செல்லும்போது, அவர் மோசேயின் மூலமாக, அவர்களை தனது சொந்த ஜனமாக ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு ஒரு தனிப்பட்ட சட்டம் அடங்கிய ஒரு புதிய உடன்படிக்கையைத் தந்தார். அந்த சட்டத்தில் ஒரு பகுதி, ஓய்வுநாளில் ஓய்ந்திருக்கும்படி அவர்களுக்குச் சொல்வதாக அமைந்துள்ளது: “ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் தலைமுறைதோறும் ஓய்வுநாளை *நித்திய உடன்படிக்கையாக* ஆசரிக்கும்படி, அதைக் கைக்கொள்ளக் கடவர்கள்” (யாத். 31:16; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது). கர்த்தர், “நித்திய உடன்படிக்கையில்” அடங்கியுள்ள சட்டத்தில், பரிசுத்த ஆராதனை மற்றும் பலிகளிடுதல் போன்றவற்றை உள்ளடக்கியதாக காண்பிக்கிறார்.

> அப்பத்தை *நித்திய உடன்படிக்கையாக* இஸ்ரவேல் புத்திரர் கையிலே வாங்கி, ஓய்வு நாள்தோறும் கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கிவைக்கக்கடவன் (லேவி. 24:8; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது; காண்க எண். 18:19).

பிறகு, உன்னுடைய வம்சாவளிகள் வரிசையில், சிம்மாசனத்தில் வீற்றிருப்பவர்கள் தொடர்ந்து இருந்து கொண்டிருப்பார்கள் என்ற வாக்குறுதியுடன், ஒரு விசேஷமான உடன்படிக்கையை தேவன் தாவீதுடன் செய்துள்ளார். மரிக்கும் தறுவாயில் தாவீது, “… நிச்சயமான *நித்திய உடன்படிக்கையை* என்னுடன் அவர் செய்திருக்கிறார்; ஆதலால் என்னுடைய எல்லா இரட்சிப்பும் எல்லா வாஞ்சையும் வளர்ந்தோங்கச் செய்யாரோ?” என்றான் (2 சாமு. 23:5; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

இஸ்ரவேலரின் உடன்படிக்கையின் ஒரு பகுதி கீழ்ப்படிய வேண்டும்; அவர் அவர்களின் தேவனாயிருக்க வேண்டும், மற்றும் அவர்கள், அவருடைய ஜனங்களாய் இருந்துள்ளார்கள் என்பதே ஆகும். அவர்கள் கீழ்ப்படிய வேண்டும் என்ற பொறுப்பிலிருந்து அடிக்கடி தவறிவிட்டார்கள், ஆகையால் அவர்களுக்கு எச்சரிக்கைகளும் மற்றும் நினைப்பூட்டல்களும், தீர்க்கதரிசிகள் மூலமாக தேவன் கொடுத்துள்ளார்:

> தேசம் தன் குடிகளின் மூலமாய் தீட்டுப்பட்டது; அவர்கள் நியாயப்பிரமாணங்களை மீறி, கட்டளையை மாறுபாடாக்கி, *நித்திய உடன்படிக்கையை* முறித்தார்கள் (ஏசாயா 24:5; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

> உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு *நித்திய உடன்படிக்கையாக* ஏற்படுத்துவேன் (ஏசாயா. 55:3; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

> கர்த்தராகிய நான் நியாயத்தை விரும்பி, கொள்ளைப் பொருளினால் இடப்பட்ட தகனபலியை வெறுக்கிறேன், நான் அவர்கள் கிரியையை உண்மையாக்கி, அவர்களோடே *நித்திய உடன்படிக்கை* பண்ணுவேன் (ஏசாயா 61:8; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

> அவர்களுக்கு நன்மை செய்யும்படி, நான் அவர்களை விட்டுப் பின்வாங்குவதில்லையென்கிற *நித்திய உடன்படிக்கையை* அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னைவிட்டு அகன்று போகாதபடிக்கு, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைத்து (எரே. 32:40; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

> மறக்கப்படாத *நித்திய உடன்படிக்கையினால்* நாம் கர்த்தரைச் சேர்ந்துகொள்வோம் வாருங்கள் என்று சீயோனுக்கு நேராய் முகங்களைத் திருப்பி, சீயோனுக்குப் போகிறவழி எதுவென்று கேட்டு விசாரிப்பார்கள் (எரே. 50:5; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

> ஆகிலும் உன் இளவயதில் உன்னோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் நினைத்து, *நித்திய உடன்படிக்கையை* உனக்கு ஏற்படுத்துவேன் (எசே. 16:60; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

> நான் அவர்களோடே சமாதான உடன்படிக்கை செய்வேன்; அது அவர்களுக்கு *நித்திய உடன்படிக்கையாயிருக்கும்;* நான் அவர்களை நிலைப்படுத்தி, அவர்களை வர்த்திக்கப்பண்ணி, அவர்கள் நடுவிலே என் பரிசுத்த ஸ்தலத்தை என்றென்றைக்கும் ஸ்தாபிப்பேன் (எசே. 37:26; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது).

*ஓலம் ʻolam* எனும் பதம் பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் பல்வேறு சூழல்களில் பல பொருட்களில் கூறப்பட்டிருப்பதனால் அதற்கு சில விளக்கம் அவசியப்படுகின்றது.[29] இப்பதம் "நித்தியமான" "நித்தியம்" என யாவே மற்றும் அவரது இயல்புகளை பற்றி குறிப்பிடுகையில் தெரிவிக்கிறது, ஏனெனில் இது அவரது நித்தியமான இயல்புகளையும் பண்புகளையும் வலியுறுத்துகிறது (21:33; உபா. 32:40; சங். 90:2; 145:13; ஏசாயா 40:28; தானி. 12:7). எப்படியாயினும் இப்பதம் எப்போதும் "என்றென்றும்" எனும் பொருளினை அளிப்பது கிடையாது.

ஆதியாகமத்தின் தொடக்கத்தில், மனிதரின் வாழ்நாட்களோடு தொடர்புப்படுத்தி "என்றென்றைக்கும்" உயிரோடிராதபடி எனும் முக்கியமான பொருளோடு நாம் இப்பதத்திற்கு அறிமுகப் படுத்தப்பட்டோம் (3:22; 6:3). பின்னர் *ʻolam* எனும் பதம் மனித வாழ்நாட்களைப் பற்றி கூறும்போது "என்றென்றும்"; என மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும், இது ஒரு உருவக மொழியில் கூறப்பட்டுள்ளது. மேலும் இது கண்ணியமாக மற்றும் கனத்திற்குரிய வகையிலும் கூறப்பட்டுள்ளது. பத்சேபாள் தனது வயது முதிர்ந்த கணவரை அணுகும்போது, எனது ஆண்டவனாகிய ராஜாவாகிய தாவீது என்றென்றும் வாழ்க என கூறினார் (1 இராஜா. 1:31), இது இவர் நெடுநாள் வாழ வேண்டுமெனும் அவரது விருப்பத்தை வெளிப்படுத்துகிறது. நெகேமியா இதைப் போன்றதொரு வாழ்த்துதலையே பெர்சிய நாட்டு அரசராகிய அர்தசஷ்டாவிற்கு கூறினார் (நெதே. 2:3).

இதற்கு முரண்பாடாக எருசலேம் மற்றும் தீரு போன்ற நகரங்களின் மீது "என்றென்றைக்கும்" அல்லது "ஒருபோதும்" கட்டப்படாது என தெய்வீக தண்டனையை அறிவிக்கையில் *ʻolam* என்பது வெறுமனே நெடுங் காலத்தினைக் குறிக்க பயன்படுத்தப்பட்டிருக்கிறது (ஏசாயா 32:14; எசே. 26:21; 27:36; 28:19), இங்கும் *ஓலம்* என்பது வெறுமனே நெடுநாளை குறிக்கப் பயன்படுகிறது. இந்த இரு நகரங்களும் புதுப்பிக்கப்பட்டு இந்நாள் வரை வரலாற்று நகரங்களாக திகழ்கின்றன.

ஆண்டவர் இந்த பூமியை "ஒருபோதும் நிலைப்பேராதபடி அதின் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்தார்" என ("ஒருபோதும்";

என்றென்றைக்கும் [*‘olam*]) (சங். 104:5). என சங்கீதக்காரர் கூறியிருக்கிறார். இந்த பூமியானது காலவரையற்ற எதிர்காலத்தன்மையுடையதாக, நெடுங்காலமாக, மற்றும் காலங்களை தாண்டி இருக்கும் எனும் இது கருத்தினை தெரிவிக்கிறது, ஆனால் பூமியானது நித்திய காலமாக இருக்காது. இந்த காலத்தின் முடிவில் ஆண்டவருடைய வாக்குத்தத்தம் நிறைவேறுமென புதிய ஏற்பாடு கூறுகிறது (2 பேதுரு 3:4). அதன் பின்னர் பூமியும், நாம் காணும் உலகமும் “சுட்டெரிக்கப்படும்,” “அழிக்கப்படும்”; மேலும் “அக்கினிக்கு இரையாக்கப்படும்” (2 பேதுரு 3:7, 10-12). இந்த “வானமும் பூமியும் … ஒழிந்துப் போன பின்னர்” (மத். 24:35), “புதிய வானமும்” மீட்கப்பட்டவர்கள் நித்தியமாக தங்குகின்ற இடமாக “புதிய பூமியும்” வெளிப் படுத்தப்படும் (வெளி. 21:1, 10; 22:19; காண்க 2 பேதுரு 3:13). எனவே ஆதியாகமம் 9:16ல் கூறப்பட்டுள்ள நோவாவோடு ஆண்டவர் செய்த “நித்தியமான” (*‘olam*) உடன்படிக்கையானது பூமியானது இருக்கும் வரைக்கும் மட்டுமே இருக்கும் என எதிர்பார்க்க வேண்டும்.

ஆதியாகமம் 13:15ன் படி இந்த *‘olam* எனும் பதத்தின் மொழியாக்கமானது, கானான் தேசத்தினை ஆண்டவர் ஆபிரகாமின் வழிமரபினருக்கு (யூதருக்கு) *என்றென்றைக்கும்* அளித்தாரெனும் முடிவிற்கு சிலரை தவறாக வழிநடத்திவிடுகிறது. இந்த சூழலில் “ஒரு நெடுகாலத்திற்கு” அல்லது “காலத்தை கடந்து” எனும் பொருள் தருதலே காலத்தை குறித்த ஒழுங்கமைவானதாக இருக்கும். பழைய ஏற்பாடு காலத்தில் இஸ்ரவேலர்களின் சுதந்திரமாகிய வாக்குப்பண்ணப்பட்ட தேசமானது, அவர்களின் கீழ்ப்படிதலின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. பல நிகழ்வுகளில் ஆண்டவர் தமது மக்களை அவர்களின் முரட்டாட்டத்தின் நிமித்தம் நாட்டை விட்டு வெளியேற்றி இருக்கிறார். ஆபிரகாம் மற்றும் மோசேயின் மூலமாக இஸ்ரவேலரோடு ஆண்டவர் செய்த உடன்படிக்கையானது இன்றைக்கு வழக்கற்று போனதாக இருக்கிறது. அவைகள் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்திய கிறிஸ்துவின் வழியாய் நிறைவேறிப்போனது (கலா. 3:8-29; எபி. 8:13).

நியாயப்பிரமாணத்தில், “அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; பத்தாம் தலைமுறையிலும் என்றைக்கும் [*‘olam*] அவர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது” (உபா. 23:3). இங்கே *‘olam* என்பது வெளிப்படையாகவே நெடுங்காலத்தை (பத்து தலைமுறைகள்) குறிப்பிடுகின்றது, என்றைக்கும் என மொழியாக்கம் செய்யப்பட்டிருந்தாலும் எழுத்துப்பூர்வமாக “என்றைக்கும்” எனும் பொருளை தருவதில்லை. ஒருவேளை அது எழுத்துப்பூர்வமாக “என்றைக்கும்” எனும் பொருட்கொண்டிருந்தால் மோவாபிய பெண்மணியாகிய ரூத் மற்றும் இஸ்ரவேலராகிய போவாஸ் வழி வந்த தாவீது ஆண்டவருடைய

சபையை விட்டு நீக்கப்பட்டிருக்க வேண்டும் (ரூத் 4:10-22).

சாமுவேலின் தாயாகிய அன்னாளின் சம்பவத்தில் கூறப்பட்டுள்ளது போன்று, *'olam* எனும் பதம் வசனப் பகுதியின் சூழலை வைத்து விளக்கப்படுகிறது. அவர் ஒரு மகனுக்காக தொடர்ந்து மன்றாடி அவனை "அவன் வாழ்நாள் வரை ஆண்டவருக்கு அளிப்பேன்" என வாக்குப்பண்ணினார் (1 சாமு. 1:11). குழந்தை பிறந்து, அவன் பால் மறந்த பின்னர் "ஆண்டவர் சமூகத்தில் என்றென்றைக்கும் [*'olam*] இருக்கும்படி" அவனை தேவனுடைய வீட்டில் கொண்டு வந்து விடுவதாக வாக்குப்பண்ணினார் (1 சாமு. 1:22). காலங்கள் சென்ற பின்னர் அவர் பிரதான ஆசாரியராகிய ஏலியிடம் அக்குழந்தையினைக் கொண்டு வந்து "ஆகையால் அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன் என்றாள்" (1 சாமு. 1:28). இந்த வசனம் *'olam* ஓலம் என்பதனை "அவன் வாழும் வரை" அல்லது வாழ் காலத்தை பொருள்படுத்துகிறது.

சூழலை வைத்து விளக்குதலுக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு, நினிவே பட்டணத்து பொல்லாத புற இனத்தவர்களுக்கு பிரசங்கிக்க மறுத்து, எதிர் திசைக்கு படகேறின யோனாவின் சம்பவத்தில் காணப்படுகிறது. பெரும் புயல் காற்று ஒன்று படகினை ஏறக் குறைய மூழ்கடித்தபோது, யோனா கடலில் தூக்கியெறியப்பட்டு ஒரு பெரும் மீனால் விழுங்கப்பட்டார். கடலலைகள்; தன்னை எவ்வாறு சுற்றி வளைத்துக் கொண்டது என்பதனை நினைவுகூருகையில் இவ்வாறு கூறுகிறார், "பூமியின் தாழ்ப்பாள்கள் என்றென்றைக்கும் [*'olam*] என்னை அடைக்கிறதாயிருந்தது, ஆனாலும் என் தேவனாகிய கர்த்தாவே, நீர் என் பிராணனை அழிவுக்குத் தப்புவித்தீர்" (யோனா 2:5, 6). யோனா அந்த பெரும் மீனின் வயிற்றிலிருக்கையில் தனது காலம் என்றென்றைக்கும் நீடித்தது என கூறினாலும், இந்த வசனத்தின் ஆக்கியோன் அது "மூன்று பகல்கள் மற்றும் மூன்று இரவுகள்" மட்டுமே நீடித்ததென கூறுகிறார் (யோனா 1:17; காண்க மத். 12:39-41).

இந்த எடுத்துக்காட்டுகள் (*'olam*) "என்றென்றைக்கும்" "என்றும்" எனும் பதங்கள் சூழலை அடிப்படையாகக் கொண்டு பொருள் பெறப்பட வேண்டும் என விவரிக்கிறது. மேலும் இவைகள் ஆண்டவருடைய உடன்படிக்கைகள் மனிதனுடைய கீழ்ப்படிதலின் அடிப்படையில் நிபந்தனைக்குட்பட்டதாக இருக்கிறது என்பதனை தெரிவிக்கிறது.

## குடித்தலும், குடிவெறியும் (9:20, 21)

மது குடித்தலை குறித்து வேதம் எவ்வித தடையையும் உறுதியிட்டு கூறுவது கிடையாது. பண்டைய உலகில் மதுவானது ஏதோ ஒரு பொதுவான பானமாக இருந்தது போன்று தெரிகிறது. தாவரங்கள், உணவு (அப்பம்), மற்றும் மது வகைகள் ஆகியவற்றை ஆண்டவர்

மனிதனுக்கு அளித்த கொடைகளாக சங்கீதக்காரன் பார்த்தார் மற்றும் மது வகைகள் “மனிதனுடைய இருதயத்தை மகிழ்விப்பதாகவும்” கூறப்பட்டுள்ளது (சங். 104:14, 15; காண்க பிர. 9:7; சக. 10:7) வாழ்வு கசந்தும் மடிந்துப் போன நிலையில் இருக்கும் ஒருவனுக்கு அவனது கடினங்களை மறப்பதற்கு மது கொடுக்கப்பட வேண்டுமென விவேகி கூறுகிறார் (நீதி. 31:6, 7) மோசேயின் சட்டப்படி, ஒவ்வொரு தகன பலியும், சமாதான பலியும் திராட்ச ரசத்தோடு இணைந்து படைக்கப்பட வேண்டுமென கூறப்பட்டிருக்கிறது (எண். 15:5-10), ஆராதனை செய்ய, ஆண்டவர் தமது பெயரை நிலைநிறுத்தின இடத்தில் மக்கள் தங்கள் பண்டிகைகளைக் கொண்டாடும் பொருட்டு அவற்றை விலை கொடுத்து வாங்க ஊக்கமூட்டப்பட்டனர் (உபா. 14:24-26).

குடிவெறியின் ஆபத்தால் அதில் அதிக ஈடுபாடு கொள்வதற்கு எதிராக வேதத்தின் ஆசிரியர்கள் எச்சரித்துள்ளனர் (நீதி. 20:1; 21:17; 23:29-35; 31:4, 5; ஏசாயா 5:11, 12; ஆபகூக் 2:5). சில வசனப்பகுதிகளில் அதிக குடி பழக்கமானது தீயொழுக்கம் மற்றும் வேசித்தனத்தோடு இணைந்து கூறப்பட்டுள்ளது (ஆதி. 19:30-38; ஓசியா 4:11, 12). புதிய ஏற்பாட்டில் பவுல் குடிவெறியின் ஆபத்தினை நன்கறிந்தவராக இருந்தார். கிரேக்க-ரோம உலகத்தில், சில சமயங்களில் குடிவெறியின் கொடூரங்கள் புற இன ஆலய வழிபாட்டின் ஒரு பகுதியாக இருந்தது, பவுல் அதனை குறித்து ஆண்டவருடைய இராஜ்ஜியத்தின் சுதந்திரத்தை அச்சுறுத்தும் மாம்சத்தின் கிரியை என கூறுகிறார் (1 கொரி. 6:9, 10; கலா. 5:19-21).

மேலும் பவுல் மது குடிப்பதனை குறித்து முற்றிலும் தவிர்த்தல் மற்றும் முழுமையான சுதந்திரம் ஆகியவற்றிற்கு இடையே ஒரு நடுநிலையினை எடுத்தார். இறைச்சியை உண்டு மது அருந்தும் உடன்பிறப்புகளை நியாயத்தீர்ப்பிடும் கிறிஸ்தவர்களோடு அவர் இணைந்து கொள்ளவில்லை, ஆனால் தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது (ரோமர் 14:17) என கூறுகிறார். அதே சமயம் அவர் தங்களது உடன்பிறப்புகளின் மனச்சாட்சியை குறித்து உணர்வுள்ளவர்களாயும் அன்புடனும் நடந்து கொள்ளும்படி ஆண்டவருடைய பிள்ளைகளை எச்சரிக்கிறார் (ரோமர் 14:14, 15, 22), இறைச்சி புசிப்பு அல்லது மது பானம் குடிக்கும் சுதந்திரத்தை பறைசாற்றி, அவர்களுக்கு இடறலாக இருக்கும் சூழலை ஏற்படுத்திவிடக்கூடாது. அவர் கிறிஸ்தவர்களை சமாதானத்திற்கு ஏற்றவைகளை தொடரும்படி வலியுறுத்தி போஜனத்தினிமித்தம் தேவனுடைய கிரியையை அழித்துப்போடாதே என கூறுகிறார் (ரோமர் 14:19, 20). அனைத்தும் சுத்தமுள்ளதுதான் எனும் நிலையை அவர் எடுத்தாலும்; ஆனாலும் இடறலுண்டாகப் புசிக்கிறவனுக்கு அது தீமையாயிருக்கும் என சேர்த்துக் கொள்ளுகிறார் (ரோமர் 14:20).[30]

ஆனாலும் இடறலுண்டாகப் புசிக்கிறவனுக்கு அது தீமை யாயிருக்கும் என அப்போஸ்தலர் நிறைவு செய்கிறார் (ரோமர் 14:21).[31]

## ஆதியாகமத்திற்கு வெளியே நோவா

தீர்க்கதரிசன நூல்கள் மற்றும் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள வேத வசனக் குறிப்புகள் நோவா பெருவெள்ளத்தின் போது வாழ்ந்த ஒரு உண்மையான நபர் என்பதற்கு உள் சான்றாக இருக்கிறது. நோவாவை ஒரு சரித்திர நபராக ஆண்டவர் ஏசாயாவைக் கொண்டு கூறியிருக்கிறார்:

> இது எனக்கு நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம்போலிருக்கும்; நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம் இனி பூமியின்மேல் புரண்டுவருவதில்லை என்று நான் ஆணையிட்டது போல, உன்மேல் நான் கோபங்கொள்வதில்லையென்றும், உன்னை நான் கடிந்து கொள்வதில்லையென்றும் ஆணையிட்டேன் (ஏசாயா 54:9).

எசேக்கியேல் நோவாவை அக்காலத்தில் வாழ்ந்த இதர நீதிமான்களோடு சேர்த்து குறிப்பிடுகிறார் "அப்பொழுது நோவா தானியேல் யோபு ஆகிய இம்மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களைமாத்திரம் தப்புவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே. 14:14).

ஆண்டவரால் உண்டாக்கப்பட்ட ஆதாமில் தொடங்கும் இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் நோவா இடம் பெறுவது அவர் உண்மையில் வாழ்ந்தவர் என்பதற்கு நம்பகத்தன்மையை அளிக்கிறது (லூக். 3:23-38). இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகை சூழலை விவரிக்கையில் நோவாவின் அனுபவத்தை விவரிக்கிறார்: நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்.

> எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண் கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும் (மத். 24:38, 39; காண்க லூக். 17:26, 27).

எபிரெய மடலின் ஆக்கியோனும் அப்போஸ்தலனாகிய பேதுருவும் நோவா ஆண்டவருக்கு உண்மையுள்ளவராக இருந்ததிலிருந்து பாடங்களை எடுத்துரைத்திருக்கின்றனர்:

> விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்;

அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான் (எபி. 11:7).

… தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப் பட்டார்கள் (1 பேதுரு 3:18-20).

… பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின் மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி … கர்த்தர் தேவபக்தியுள்ளவர் களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார் (2 பேதுரு 2:4-9).

---

இறுதிக் குறிப்புகள்

[1]Jacob Milgrom, “Blood,” in *Encyclopaedia Judaica*, 2d ed., ed. Fred Skolnik (Detroit: Macmillan Reference USA, 2007), 3:771. [2]காண்க S. David Sperling, “Blood,” in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 1:762. [3]Leonard J. Coppes, “דָּרַשׁ” in *TWOT*, 1:199. [4]Kenneth A. Mathews, *Genesis 1—11:26*, The New American Commentary, vol. 1A (Nashville: Broadman & Holman Publishers, 1996) 404. [5]இது எபிரேய பதத்திற்கு மற்றொரு சாத்தியமான பொருள். (Coppes, “קוּם,” in *TWOT*, 2:793.) [6]Victor P. Hamilton, *The Book of Genesis: Chapters 1—17*, The New International Commentary on the Old Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1990), 316. [7]Coppes, “קֶשֶׁת,” in *TWOT*, 2:819. [8]நோவாவின் காலத்திற்கு பின்னர், பண்டைய கட்டுக்கதைகளில் பரலோகத்தில் தனது பகைவருக்கெதிராகவில் மற்றும் அம்புகளை பயன்படுத்திய கடவுளர்களின் உருவங்கள் இடம் பெற்றிருந்தன. [9]W. Schottroff, “זכר,” in *Theological Lexicon of the Old Testament*, trans. Mark E. Biddle, ed. Ernst Jenni and Claus Westermann (Peabody, Mass.: Hendrickson Publishers, 1997), 1:383. [10]F. J. Helfmeyer, “אוֹת,” in *Theological Dictionary of the Old Testament*, trans. John T. Willis, ed. G. Johannes Botterweck and Helmer Ringgren (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1974), 1:177.

[11]கி.மு. மூன்றாம் ஆயிரம் ஆண்டுகளின் தொடக்கத்தில் சீரியா நாட்டு போர் வீரர்களுடைய விருத்தசேதன சித்தரிப்பு. (Jack M. Sasson, “Circumcision in the Ancient Near East,” *Journal of Biblical Literature* 85, no. 4 [December 1996]: 475–76.) ஏறக்குறைய கி.மு. 2300 ஆண்டு எகிப்தியர்களின் விருத்தசேதன விவரிப்பு. (John A. Wilson, trans., “Circumcision in Egypt,” in *Ancient Near Eastern Texts Relating to the Old Testament*, 3d ed., ed. James B. Pritchard [Princeton, N.J.: Princeton University Press, 1969], 326.) [12]John T. Willis, *Genesis*, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1979), 181. இந்த “ஆரம்பம்” வினைச் சொல் மீண்டும் (חָלַל, *chalal*, சலால்); எனும் சொல்லிலிருந்து வருகிறது. இந்த சொல்லின் வடிவங்கள் 4:26; 6:1; 11:6 ஆகிய வசனங்களில் “ஆரம்பம்” என மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. NIV வேதம் 9:20ஐ இதனை போன்றே பொருள் தருகிறது “பயிரிடுகிறவனான நோவா, திராட்சத் தோட்டத்தை நிறுவச் சென்றான்.” [13]Jon D. Levenson, “Genesis,” in *The Jewish Study Bible*, ed. Adele Berlin and Marc Zvi Brettler (New York: Oxford University Press, 2004), 25. [14]நோவாவின் பேழை தங்கின அர்மீனிய பகுதியில் ஒரு தொன்மையான திராட்ச ரச சாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது ஆர்வத்தை தூண்டுவதாக உள்ளது (http://news.nationalgeographic.com/news/2011/01/110111-oldest-wine-press-making-winery-armenia-science-ucla/; Internet; accessed 20 December, 2013). பாபிலோனிய பாரம்பரியத்தின்படி பெருவெள்ளத்திற்கு முன்னர் திராட்சையின் விளைச்சல் இருந்தது. (*The Epic of Gilgamesh* 11.72–73.) [15]H. C. Leupold, *Exposition of*

*Genesis*, vol. 1 (N.p.: Wartburg Press, 1942; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1953), 345. [16]F. Brent Knutson, "Naked," in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 3:480. Knutson, அவர்கள் வெளிப்படுத்தின விசேஷம் 16:15 னை விமர்சிக்கையில் "விழித்திருந்து உடுத்தியிருப்பது, உறங்கி நிர்வாணமாயிருப்பதற்கு எதிர் உவமைப்படுத்தப் படுகிறது" என கூறுகிறார். [17]Leupold, 346. [18]*The Tale of Aqhat* A.1.32–33. [19]Willis, 183. நோவாவின் சாபம் கானானின் வழிமரபினரின் ஏழு நாட்டை பிடித்துக் கொண்டது; யோசுவாவும்; இஸ்ரவேல் மக்களும் கானான் நாட்டை கைப்பற்றுகையில் அந்நாட்டை இந்த மக்கள் ஆக்கிரமித்து இருந்தனர் (உபா. 7:1-11). ஆப்பிரிக்காவில் குடியிருந்த காமின் இதர வழிமரபினை இந்த சாபம் தொடரவில்லை (காண்க சங். 105:23; 106:21, 22) வரலாற்று பூர்வமாக ஆப்பிரிக்க குடிகளை அடிமைப்படுத்தி அவர்களை முறையற்று நடத்தினதற்கு வசன ஆதராமாக ஆதியாகமம் 9:25 னை சிலர் தவறாக குறிப்பிடுவதுண்டு. [20]15:16ல் இஸ்ரவேல் மக்களால் கானான் நாட்டிலிருந்து விரட்டப்பட்ட கானானிய குடிகளுக்கு எமோரியர் என்ற பதமும் பயன்படுத்தப்படுவது உண்டு (நியா. 6:10; 1 சாமு. 7:14; 1 இராஜா. 21:26; 2 இராஜா. 21:11).

[21]Theophilus Goldridge Pinches and Roland K. Harrison, "Japheth," in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:967. [22]"Targum of Onkelos," in *The Targums*, trans. J. W. Etheridge (New York: KTAV Publishing House, 1968), 54. இதனைப் போன்ற கண்ணோட்டங்கள் புக் ஆஃப் ஜுபிலி மற்றும் பாபிலோனியன் டல்முட் ஆகியவற்றில் காணப்படுகிறது. "ஷெக்கினா" என்பது ஆண்டவருடைய மகிமையை குறிக்கிறது. [23]Philip S. Alexander, "Targum, Targumim," in *The Anchor Bible Dictionary*, 6:321. [24]Clayton G. Libolt, "Canaan," in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 1:590. [25]*The Epic of Gilgamesh* 11.193–94. [26]6:4ல் அவர்கள் "புகழ்பெற்ற மனிதர்கள்" (எழுத்துப் பூர்வமாக "பேர் பெற்ற மனிதர்கள்") என NASB மொழிபெயர்ப்பு கூறுகிறது. வேறு சொற்களில் கூறுவதெனில், சில சமுதாய குழுக்களில் தங்களுக்கென்று பெரிய பெயரினை ஏற்படுத்தி, தங்கள் பொல்லாத செயல்களை பின்பற்றுகிறவர்களுக்கு கதாநாயகனானார்கள். [27]பட்டயம் என்பதற்கு பவுல் பயன்படுத்திய சொல் மக்கைரியா μάχαιρα (*machaira*), என்பதாகும், இது (அப். 12:2ல் கூறியுள்ளபடி) மரண தண்டனை கொடுப்பவர்களின் பட்டயத்தை குறிக்கின்றது, மேலும் இது "தீமை செய்வோரை தண்டிக்கும் அதிகார" வல்லமைக்கு அடையாளமாக இருக்கின்றது. (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick William Danker [Chicago: University of Chicago Press, 2000], 622.) [28]வெளிப்படுத்தின விசேஷம் 13:1-10ல் கூறப்பட்டுள்ள "மிருகம்" என்பது ரோம அரசாங்கத்தை குறிக்கிறது, மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 13:11-18ல் சித்தரிக்கப்பட்டுள்ள கள்ளத்தீர்க்கதரிசி என்பது பேரரசரை வழிபடும் சமயமரபை உருவகப்படுத்துகிறது. [29]Francis Brown, S. R. Driver, and Charles A. Briggs, *A Hebrew and English Lexicon of the Old Testament* (Oxford: Clarendon Press, 1962), 761–63. [30]பவுல் கிறிஸ்தவர்கள் அனைத்தையும் தவிர்த்து விட வேண்டுமென்றும், தங்களது உடன்பிறப்புகளை மகிழ்விக்காத எச்செயலையும் செய்யக் கூடாதென்றும் பொருள்படுத்தவில்லை. அவர் ஏற்கெனவே "அவனை உன் போஜனத்தினாலே கெடுக்காதே, கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே" (ரோமர் 14:15) என கூறினது போன்று, அவர்களின் விசுவாசத்திற்கும் ஆவிக்குரிய வாழ்விற்கும் "இடறலாக" இருப்பதனை குறித்து கூறுகிறார் (ரோமர் 14:13, 21).

[31]ஒருவேளை பவுல் இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்திருப்பார் எனில், மேற்கண்ட சொற்றொடரோடு "நீங்கள் காரை ஓட்டும்போது நிதான புத்தியை இழக்கக்கூடிய எதையும் உட்கொள்ள வேண்டாம்" என்பதனைப் போன்ற சொற்களை சேர்த்திருப்பார். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான நெடுஞ்சாலை விபத்துகள் குடிகார ஓட்டுநர்களால் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட நிகழ்வுகள் கிறிஸ்தவர்களை நிதானித்து மது பானம் குடிப்பதன் பின்விளைவுகளை கவனமாக யோசிக்கவும் செய்யத்தூண்ட வேண்டும்.